kadu.editer@gmail.com

# முகடு

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

Mukadu

ருமாத இலக்கிய இதழ். ஆடி - ஆவணி - 2015 ஓலை – 6



# யூலை 05.

நெடுமாறன்

நெல்லியடி மில்லர் அடி
நினைத்தால் யூலை 05
இப்பவும் நெஞ்சிடிக்குமே
பகைவனுக்கு...
விடுதலை நெருப்பாற்றில்
விதி மாற்றி எழுதிவிட்டு
வீரவரலாறாகி
உறங்கும் வீரமறவர்கள்
காலத்தில்
களம் தாங்கிய விழுதுகள்
நிலம் காத்திட
நீறாகிப் போனவர்கள்
நினைக்கின்றோம் இந்நாளில்...
இனத்தின் வதை கண்டு
இலட்சியத்திற்காய்
பொன் மேனி
சதையாய் பிய்த்தெறிந்து
விதையாய் வீழ்ந்திட்ட
வரலாற்றின் கதாநாயகர்கள்
ஈழத்தின் காவல் தெய்வங்கள்
மில்லரின் வழி தொட்டு
வந்த புனிதர்களை போற்றுகின்றோம்.
காற்றே புகுந்திட முடியாத
களத்திற்கு நேற்று
கந்தகம் சுமந்து சென்று


எந்த குந்தகம் கண்டாலும்
பகைவன் குகையேறி பந்தாடியவர்கள்...
எவருமே அறியாமல்
எமனுக்கும் தெரியாமல்
தம் சா தேதி குறித்து சென்று
தகர்த்து விட்டோம் இலக்கினை என்று
சொல்லி சரிந்த சிகரங்கள்
சந்தண பேழைகளில் ஏறி
கல்லறைக்கும் சென்று விடாது
களத்திலேயே உறங்கிய
காவிய நாயகர்கள்
இவர்கள் காலத்தின் அவதாரமே...
விடுமுறையில் வருவதாக
வீடு வந்து சொல்லி சென்றவர்கள்
தினசரி பத்திரிகையில்
செய்தியாய் வந்து
எமை திகைப்பில் ஆழ்த்திய
தியாக செம்மல்கள்
திரை மறைவில் உரு
மறைந்து வாழ்ந்து எம்
தேசத்திற்காய் உயிர் கொடுத்து
வானில் நிலவாய் ஒளிரும்
இவர்களோ இன்று
விண்மீன்கள் விடுதலை பாதையினில்...

# வன்னிப்பெரு நிலப்பரப்பில்

# ஆய்வுக்குட்படுத்தப்படாத தொல்லியல் மையங்கள்

தியாகராஜா தீபாகரன்.
ஊடகவியலாளர்.

**பகுதி-5**




**கரும்புள்ளியான்**

பாண்டியன் குளத்திலிருந்து மல்லாவி செல்லும் வீதியில் கரும்புளியங்குளம் என முன்னர் அழைக்கப்பட்ட இடம் இன்று கரும்புள்ளியான்என திரிபடைந்து அழைக்கப்படுகிறது. கரும்புள்ளியான்குளக்கட்டு ஆரம்பிக்குமிடத்திற்கு 500 மீற்றர்கள் முன்உள்ளதிட்டையாக அமைந்தபகுதியில் வீதியின் இருமருங்கிலும் கருங்கற்களும், செங்கற்களும் கொண்டு அமைக்கப்பட்ட கோயிற்கட்டட இடிபாடுகளும் மட்பாண்டஎச்சங்கள் பலவும்
நிலத்தின் வெளிப்புறத் தேசிதறிக்கிடக்கிறது.
தற்போது, அவ்விடத்தில் சிலவருடங்களுக்கு முன் கட்டப்பட்ட சிவாலயம் ஒன்றுள்ளது. இச்சிவாலயம் அமைந்துள்ள காணிப்பரப்பினுள் ஏராள-மான மட் பாண்டச் சிற்பங்களின்சிதைவுகளும், கருங்கற் பாறையினால் செதுக்கப்பட்டகற்றூண்கள் மேடைவடிவப்பாறைகளும் தென்படுகிறது. ஆலயத்தின் நேர்கிழக்கில் 100 மீற்றர் தூரத்தில் பழையபாழடைந்து போன கேணி அமைப்பு ஒன்றும் காணப்படுகின்றது. இதன்படிகள் கருங்கற்பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருப்ப தோடு 15 அடி ஆழத்திற்கு மேற்பட்டதாகவும் காணப்பட்டது. 20 வருடங்களுக்கு முன்னர்காணி உரிமையாளர் இவ்கோணியை தோண்டிப்பார்க்க முற் பட்டபோது அதனுள் இருந்து சிலசிற்பங்களும், மட்கலங்கள், சில உலோகப்பாத்திரங்களு வெளிப்பட்டன. அனால் அன்றையகாலத்தில் அச்சங்காரணமாக மேலும் தோண்டாமல் இக்கேணியைவிட்டுவிட்டனர். அதனுள் குப்பை கூழங்களைப் போட்டு கேணியை நிரப்பிவிட்டனர். தனியாருக்குச்சொந்தமான காண-ிகளாகவே
இருந்ததனால எந்நேரமும்யாரவும் சென்றுபார்ப்பது சிரமமானதேதற் போதுதூர்த்தழிக்கப்பட்ட நிலையில்காணப்படும் அவ்விடம்சிறியநீர்தேங்கும் குட்டைபோன்று
காட்சியளிக்கிறது.அநேகமாக இக் கேணியினை அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்துவதன் மூலம்மேலும் ஏராளமான தொல்லியற் பொருட்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். அதன் மூலம இப்பிரதேசத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும பற்றியதான தகவல்களைத் துல்லியமாக அறியமுடியும். பயிற்செய்கையின் பொருட்டு இப்பகுதியிலிருந்த
ஏராளமான தொல்லியற் சான்றுகள சிதைவடைந்த போதிலும் வீதியாற்செல்பவர்கள் இலகுவாக

அடையாளங் காணப்படக்கூடிய வரலாற்றுத் தொல்லியற்தளமாகவே இதைக்கணிக்கமுடியும். நீண்டகாலமாக கவனிப்பாரற்று ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் இருந்த இவ்விடம்தற போதுதான் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தொல்லியலாளர் புஸ்பரட்ணம் அவர்கள் நேரடியாகப்பார்வையிட்ட தோடுதொல்லியற் சான்று களைப்படியெடுத்து ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறார். இங்கேகண் டெடுக்கப்பட்டசுடு மண்சிற்பங்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாய்த் தெய்வவழிபாட்டு உருவங்களாகவே கணிக்கப்படுகிறது. இக்தொல்லியற் தடயப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கத்தின்ஆவுடையார் பகுதிபல்லவர்கால (7-9 நூற்றாண்டு) காலப்பகுதிக் குரியகலைவடிவமாகவே தென்படுகிறது. அத்தோடு கருங்கற்களாலானகய லட்சுமிவடிவம் பொறிக்கப்பட்ட எல்லைக்கற்கள் சிலவும் அங்கேகண் டெடுக்கப்பட்டது. கயலட்சுமிவடிவம் பொறிக்கும்முறை 12 நூற்றாண்டு காலப்பகுதியைச் சேர்ந்ததாகவேபொது வாகக்கணிக்கப்படுகிறது

ஆகவே இப்பிரதேசம்நீண்ட தொடர்ச்சியான மக்கள் வாழ்விடமாக இருந்ததற்காகவலுவான சான்றாதாரமாக கொள்ளலாம். இலங்கையின் வரலாற்றுக்காலங்களில் உத்தரதேசம் என அழைக்கப்பட்டநாகவம்ச ஆட்சிக்காலத்தில் முக்கியமான ஆட்சிமையங்களின் பகுதியாகஇது இருந்திருக்கக்கூடும் ஏனெனில் இதன் மேற்குத்திசையில்கல்விளானில் ஓர் குடியிருப் புமையமும், தெற்கில் பனங்காமம்மையமும், கிழக்கில்பாலிநகரமையமும் (வவுனிக்குளம்), வடக்கேமல்லாவியில் ஒருமையமுமாக இவ்விடத்திலிருந்து ஐந்துமைல் சுற்றிளவிற்குள் நாற்புறமும் குடியிருப்புமையங்கள் இருப்பதனை நோக்குமிடத்து மேற்குறிப்பிட்டமுடிவுக்குவருவது இயல்பானதே. ஆகவே இப்பகுதிவிரிவான ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் வட இலங்கையின் மனிதக் குடியமர்வுகள்ளின் ஆரம்பகாலம் பற்றிய சான்றாதாரங்கள் கிடைப்பதற்கான சாத்தியங்கள் பல உள்ளன.

**பனங்காமம்**

வன்னியின் ஆதிக்குடியிருப்புகளில் ஒன்றான பனங்காமம் கிராமத்தின் சுற்றுப்புறமெங்கும் ஏராளமான தொல்லியற் சான்றுகளைக் காணமுடியும். கருங்கற்றூண்கள், செயற்கையாகஉருவாக்கப்பட்டமண் திடல்களும், வட்டவடிவமாகநிறுவப்பட்ட கற்றூண்கள், மட்பாண்டத்துண்டங்கள், கட்டடச்சிதைவுகள், போன்றவற்றை காணமுடியும்.

பறங்கியாற்றின் கிழக்குப்புறத்தில் அமைந்துள்ள பனங்காமமும், அதற்கு அருகிலுள்ள இளமருதங் குளப்பகுதியிலும் காணப்படுகின்ற கட்டடஇடிபாடுகள் இன்றுவரை முறையான தொல்லியற் பகுப்பாய்வுக்குட்படுத்தப்படவில்லை. இவ்வாறே பறங்கியாற்றின் மேற்குப்பகுதியில் நாட்டப்பட்ட நிலையிலிருக்கின்ற கற்றூண்களும், செயற்கையாக உருவாக்கப்பட்ட மண்திட்டுக்களும், அக்காலப் பகுதியின் முக்கிய மனிதர்களின்சவ அடக்கவிடமாவோ அல்லது நினைவிடங்களாகவோ இருக்கலாமென ஊகிக்கக் கூடியவகையிலான அமைப்புமுறைகளே அப்பகுதியில்காணப்படுகின்றது.

மேலும் பனங்காகம் சிவன்கோயில் சுற்று வட்டமும்மிகமக்கியமான தொல்லியற் சான்றுகளைக் கொண்டபகுதியாககாணப்படுகிறது. சிவன்கோயிற் சுற்றாடலில் மண்ணுள் புதையுண்டு காணப்படுகின்ற கட்டடஇடிபாடுகள் சோழர்காலகட்டடக் கலைவடிவமைப்பை கொண்டிருக்க கோயிலினுள்ளே இருக்கின்ற சிவலிங்கம் பல்லவர்காலத்தில் அதாவது 7ம்-8ம்நூற்றாண்டுகளில் வடிவமைக்கப்பட்ட சிற்பவடிவமைப்பைக் கொண்டிருப்ப தோடு சிவலிங்கத்தை மிக உற்றுநொக்கினால் அதில் ஒருவேல் வடிவம் பொறிக்கப்பட்டு தலைப்பகுதியில் ஒருமுகவடிவம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வகை சிவலிங்கம் பல்லவர˙காலத்திற்குரியதென தொல்லியலாளர் புஸ்பரட்ணம் அவர்கள்கூறுகிறார்.

மேலும் இச்சிவன் கோயிலின் சுற்றுப்புறத்தில் காணப்படுகின்ற மட்பாண்ட ஓடுகளும், மட்பாண்டச் சின்னங்களும் பெருங்கற்காலப் பண்பாட்டு நாகரிககாலத்திற் குரியதென குறிப்பிடப்படுவதனால் பனங்காமம் பகுதி-மிக நீண்டதொடர்ச்சியான தமிழ்மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாதாரங்களை இன்றுதரக்கூடிய அல்லதுபறை சாற்றுகின்ற இடமாகவேகொள்ளப்படுகிறது.

சோழர் ஆட்சியின் தொடர்ச்சியாக வன்னிக் குறு நிலமன்னர்களின் ஆட்சியியல்மையமாக பனங்காமம் இருந்தமையை நவீன வரலாற்றுப் பதிவுகள் உறுதி செய்வதும் பனங்காமத்திலண் மிகச்சிறந்த ஆட்சியாளனாக வன்னியர்திலகம் என்றழைக்கப்பட்ட கைலாய வன்னியனார அரை நூற்றண்டுகள் ஒல்லாந்தருக்கு அடிபணியாமல் ஆட்சிசெய்திருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

எனினும் நீண்ட தொடர்ச்சியான தமிழ்மக்களின் வாழிடமாக கருதப்படுகின்ற பனங்காமமும், அதன் சுற்றுப்புறமும் உள்ளபுராதன குடியிருப்புக்களும் அவற்றின் தோற்றம்பற்றியதான உறுதிபடக்கூறக்கூடியவாறான தொல்பொருள் ஆய்வுகள் எதனையும் யாரும் முறையாக இதுவரை மேற்கொள்ள வில்லை.

# மறைக்கப்பட்ட நீதியின் மேல் நீதிக்கான பயணம்

**நவரஞ்சினி நடராஜா (சுரேக்கா), தவச்செல்வி**
**(பருத்தித்துறை)**




கடற்பரப்பின் ஒளிப்புனலிலும் மௌன அலைகளின் வரவேற்பிலும் புங்குடுதீவினை நோக்கி கடலை ஊடறுத்தவாறான எமது பயணத்தில் வித்யாவின் நினைவுகளுடன் நீண்டு சென்றது பாதை. பரந்து நீண்டிருந்த கடலின் ஆழத்தில், உப்புக்காற்றின் ஈரத்தில், எம்மவர் கதைகள் புதைந்திருப்பதனை உணர முடிந்தது. நீதிமன்றக் கட்டடத்தைத் தாண்டிய போதே வழமைக்கு மாறான இராணுவம் மற்றும் பொலீஸாரின் பிரசன்னத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இராணுவ மயமான யாழ்ப்பாணக் கோட்டை, காலனித்துவ காலத்தினதாக மட்டுமல்லாது நிகழ்கால ஆக்கிரமிப்பின் சாட்சியமாகவும் நின்றது. இராணுவ மற்றும் கடற்படைத் தளங்களையும் கடந்த எமது பயணத்தை உள்வாங்கிக்கொண்டது தீவகம். வெறுமையான அழகிய வீடுகள் மட்டுமல்லாது, வெறும் கட்டடங்களும், உடைந்துபோன

வீடுகளின் கற்குவியல்களும் ஓடில்லாத வீடுகளும் தங்கள் குடும்பங்களை இழந்து போர், இடப்பெயர்வு மற்றும் புலம்பெயர்வின் மௌன சாட்சியங்களாகி நின்றன. வீதிகளில் மிகமிகக்குறைவான மக்கள் நடமாட்டம் ஊரடங்கின் ஞாபகங்களை நினைவூட்டின. வித்யா படித்த பாடசாலையைக் கடந்து செல்லும் போதுதான் அம்மாணவியின் வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையிலான பாதையின் வெறுமையினையும் மனித ஓலத்தை விழுங்கும் மௌன மரங்கள் பற்றைகளின் அச்சுறுத்துவதனையும் உணர்ந்து கொள்ள முடிந்தது. அரவங்களேதுமற்ற சாலையை நெருஞ்சி முட்களும் அலரி மரங்களும் கற்குவியல்களும் நிரப்பி நின்றன. ஆனால் அந்தப் பாதையும் அது சார்ந்த போக்குவரத்தும் அவ்வூரின் வாழ்வியலோடு அவர்களுக்குப் பழக்கப்பட்டிருப்பினும் வித்யாவிற்கு நேர்ந்த அவலத்தின் காரணங்களுக்கான குறிகாட்டிகளாகவே அவை எமக்குத் தெரிந்தன.

வித்யாவின் தாயார், வித்யாவுக்கும் மனிதர்களுக்குமான உறவுநிலையை விட வித்யா தான் சார்ந்த சூழலுடன் இயைபாக்கம் அடைந்திருந்தமையைப் பிரதிபலிக்கும் ஞாபகங்களையே அதிகமாகப் பகிர்ந்தார். தினமும் பாடசாலைக்குச் செல்லுமுன்னர் வீட்டில் நிற்கும் ஆடு, நாய்கள் மற்றும் பறவைகளுடன் தன்

உரையாடலை முடித்துவிட்டே செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்த வித்யா, அன்றும் அவ்வாறே இயற்கையுடனான உரையாடலை முடித்துவிட்டு, பாடசாலை சென்றவர் வீடு திரும்பவில்லை.

பாடசாலை நேரம் முடிவடைந்தும் வீடு வந்து சேராத கவலையில் இருந்த வீட்டினருக்கு, ஒரு பெண் வீடு திரும்பவில்லை என்று வீட்டினர் தேடினால் எழுகின்ற காதலாக இருக்குமோ என்ற சந்தேகம்

கூட வித்யா சார்ந்த சமூகத்தில் எழவில்லை. ஆனால் பாதுகாத்திருக்கவேண்டிய பொலிசிடமிருந்து கிடைத்த எதிரொலி விட்டேத்தியானதாகவும் பொறுப்பற்றதாகவும் காணப்பட்டதாகத் தாயார் கூறினார். அடுத்த நாள் காலையில் வித்யாவின் வளர்ப்பு நாயுடன் தங்கையைத் தேடித் திரிந்த அண்ணனுக்கு, சில மனிதர்களால் குதறப்பட்டு அலரிப் பற்றையினுள் சிதறிப்போயிருந்த தங்கையின் உடலே கிடைத்திருக்கிறது. அந்த இடத்தினைப் பார்வையிட்டபோது ஆத்மாவின் ஆழுத்தினுள் எழுந்த வித்யாவின் வலியின் கதறலானது யாருக்கும் எட்டவில்லையே என்ற வேதனையின் உச்சம் அந்த இடத்தினைச் சூழ்ந்திருந்ததை உணர முடிந்தது. முள்ளிவாய்க்காலில் இருந்து காப்பாற்றிய தனது பிள்ளையை, இவ்வாறு பலிகொடுத்ததென்பது தாயை அதிரவைக்க, தந்தையோ பாரிசவாதத்தின் இயலாமையிலும் மகளை இழந்த துயரத்திலும் தற்கொலை செய்ய வேண்டும் என்ற மனநிலைக்கு சென்றுவிட, தங்கை இறந்து இரு வாரங்களாகியும் உறக்கமற்றுத் தவிக்கும் அண்ணனும், வித்யாவுக்கு நீதி கிடைக்காது போய்விடுமோ என்ற ஆதங்கத்துக்குள் வித்தியாவின் உறவுகளும் தடுமாறி நிற்கின்றன. வித்யா அனுபவித்த வேதனையின் ஆழமான அதிர்வலைகள் அலரிப்பற்றைகளை மட்டுமல்லாது வடக்கு கிழக்கு தாண்டி இலங்கை ஜனாதிபதி மாளிகையைக் கூட அசைத்திருக்கின்றன.

போருக்குப் பின்னர் ஆழங்களில் அடக்கிவைக்கப்பட்ட சமூக மௌனம் அரவமில்லாமல் அதிர்ந்திருக்கின்றது. ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இளைஞர்களும் வீதிகளில் நீதியைத் தேட, சிலர் நீதிமன்றக் கட்டடத்தின் முன்னால் நீதிமன்ற நீதிக்கும் அப்பாலான நீதியைத் தேட முற்பட்டனர். அமைதி ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களாய் மாற, நீதிமன்ற வளாகத்தினை நீதிமன்ற நீதியின்பால் ஏற்பட்ட நம்பிக்கையின்மையினால் உடைத்தனர். இச்செயற்பாடு யாழ்ப்பாணத்தில், இல்லாத அமைதியைக் கேள்விக்குள்ளாக்கியதாகச் சிலர் கூறிக்கொண்டிருந்தனர். இத்தாக்குதலின் பின்னணியில் அரசியல் ஊடறுத்தல்களும் இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இது எதுவாக இருப்பினும் இவ்வாறான பின்புலங்களையும் நீதிமன்றத்தைக் கூட நியாயம் கேட்கும் மனநிலையை உருவாக்கிய அரசுசார் கட்டமைப்புக்கள் நிச்சயமாகப் பொறுப்புக் கூறவேண்டிய தேவைக்குள் தள்ளப்படுவது இன்னமும் உணர்ந்துகொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் அமிழ்ந்துபோன உணர்வுகளின் வெளிப்பாட்டுக்கான




தளமாகவும் இது பார்க்கப்பட முடியும். இந்த ஆரவாரங்களுக்குள் இயல்பாக வரவேண்டிய, உரிமைக்காகக் குரல்கொடுக்கும் வெளிகள், ஜனநாயகம் மற்றும் மாற்றம் என்ற போர்வைகளுக்குள் அதிகாரத்திலுள்ளவர்களால் தரப்பட்ட வெளிகள் என்பதை உணர முடியாமலேயே, ஜனநாயக வெளி காணப்படுகின்றதென்ற தொனியும் நீரோட்டத்தில் கலந்துகொண்டது. அமைதி காப்பது என்ற வகையில் 129 பேரின் கைதும், இவ்வாறான போராட்டங்கள் நடத்துவதற்கான தொடர்ச்சியான நீதிமன்றத் தடையுத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டமையும் நிகழ்ந்தன. ஆனால் வித்தியா அனுபவித்த அவலத்தின் காற்று தமிழ்பேசும் சமூகங்களைத் தாண்டி சகோதர மொழி உறவுகளையும் கைகோர்க்க வைத்தது.

இங்கு வித்யாவின் கொலையில் குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் பல தகவல்கள் வெளிவந்தபோதிலும் கண்டிப்பாகச் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை உள்ளது. குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான சந்திரகாந்தன் என்பவர் அவரது மனைவியைத் துன்புறுத்தியதாக மனைவியால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் பிரகாரம், அவரது மனைவி இன்னமும் அவருக்குப் பயந்து மறைவாகவே வாழ்ந்து வருகிறார். வித்யாவின் கொலையின் தொடர் தேடல்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வேறு பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்பதுடன், வேறு சில வன்புணர்வுகள் தொடர்பான தகவல்களையும் போதைப்பொருட்கள் கடத்தல் தொடர்பான புது தகவல்களையும் தருவதாக நம்பப்படுகிறது. அதுமட்டுமல்லாது, நாட்டின் நீதியைக் காப்பதற்கு உறுதுணையாக நிற்க வேண்டிய பொலிஸிற்குத் தெரியாமல் இக்கொடுமைகள் நடைபெற்றிருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் இல்லை என்ற சந்தேகத்தையும்

வலுப்படுத்துகிறது.

அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் பதவிசார்ந்த அரசியலுக்காக வழுங்கப்படும் வித்யாவிற்கான ஆதரவுகள் அலைமோதத் தொடங்கின. அடுத்த தேர்தலுக்கான வாக்குறுதிகளின் ஆரம்பப்புள்ளி வித்தியாவின் இறுதிப்புள்ளியிலிருந்து ஆரம்பிக்கிறதா? மூன்று மாதங்களுக்கு முன்னால் மல்லாவியில் பல பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்து, அவற்றினைக் காணொளிப் பதிவுகளாக்கி, பல அப்பாவிகளின் வாழ்க்கையினைக் கேள்விக்குள்ளாக்கிய அரசியல் கட்சியொன்றின் மல்லாவிப் பிரதேசசபை உறுப்பினரின் வெறித்தனத்தை வெளிக்கொணரும்படி அந்த அரசியல் கட்சியிடம் கேட்டபோது, மௌனித்திருந்த அவர்களின் வாய்களும் பேனாக்களும், ஏனைய அரசியற்கட்சிகளும் இன்று வித்யாவை தமது அரசியல் மூலதனமாக்க முயல்வது வித்யாவின் ஆன்மாவை மீண்டும் ஒரு தடவை வலிக்க வைத்திருக்கும்.

நாட்டின் முதற்குடிமகன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் வித்யாவினுடைய குடும்பத்தினரைச் சந்தித்து தன் ஆறுதல்களைப் பகிர்ந்திருக்கிறார். பெண்கள் அமைப்புக்களும் மனித உரிமைகள் சார்ந்து பயணிக்கும் அமைப்புக்களும் நீதிக்கான பயணங்களைத் தொடர்கின்றன. எல்லாமே வித்தியா என்ற மையத்தில் ஆரம்பித்தாலும் இதனு டைய ஒட்டுமொத்த பரிணாமத்தை விளங்கிக்கொண்டு அதன் மையத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை. அத்தோடு இதனை வித்யாவின் குடும்பம் சார் நோக்குநிலையிலும் சமூகஞ்சார் உள்ளகப் பரிமாணத்திலும் பார்ப்பதற்கான தடைகள் உள்ளன என்பது அக்குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படுத்திய நெருங்கிய தொடர்பில் விளங்கிக்கொள்ளப்பட்டது.

வித்தியாவின் குடும்பத்தின் நுண் உளவியல்சார் விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுபவர்களும் மிகக்குறைவே. பேட்டிகள் கலந்துரையாடல்கள் என்ற பெயரில் கிடைக்கும் தகவல்கள் ஆழமான விடயங்களை வெளிக்கொண்டுவராத காரணங்களும் இன்னமும் விளக்கமின்றியே காணப்படுகின்றன. சட்ட மற்றும் சமூக நீதிக்கான தேடுதலையும் தாண்டி, அக்குடும்பம் வித்தியா பட்ட வலிகளுக்கான பதிலையும் வேண்டி நிற்பது பதியப்பட வேண்டியதொன்றாகும். வித்தியாவின் வலி மாத்திரமல்ல செம்மணியின் வலியும், முள்ளிவாய்க்காலின் வலிகளும், உடைகள் களையப்பட்டு பாதுகாப்புப் பரிசோதனையில் தமிழ்ப் பெண்கள் பட்ட வலிகளும் மட்டுமல்லாது நீதிக்காகக் காத்துக்கிடக்கும் ஏனைய பெண்களின் வலிகளும் வித்தியாவின் வலியினூடாகப் பேசப்படுவது தொடருமா என்ற கேள்வியும் ஆழமாகவே காணப்படுகின்றது. இப்போராட்டமானது பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கி கொலை செய்யப்பட்டவர்களுக்காக மட்டுமல்லாது பாலியல் வன்புணர்வு உள உடல் சார்ந்த, மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் வீட்டு வன்முறைகள் பெண்மீதான பாரபட்சங்கள் மற்றும் உரிமை மீறல்கள் போன்ற பரந்துபட்ட தளத்தில் தொடர்ச்சியாக பேசப்படுவதாகவும் வரமுன் தடுப்பதாகவும் இருத்தல் அவசியமானதாகின்றது.

வித்தியாவுக்காக திரண்ட கூட்டத்தைப் பார்த்து இனிமேல் நாம் விழிப்பாகிவிடுவோம் என்ற ஆறுதலின் வீச்சம் அடங்கமுன்னரே பரந்தனில் வைகாசி 27ம் திகதி இன்னொரு சிறுமி வன்புணர்விற்குட்படுத்தப்பட்டமை எதனைச் சுட்டி நிற்கிறது என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். மறைக்கப்பட்ட நீதிகளின் மேல் நீதிக்கான பயணங்களிருப்பின் நீதியை எங்கே தேடுவது என்பது கண்டுபிடிக்கப்படவேண்டும்.

வித்தியாவின் மரணம் எமது விழிப்பிற்கான இறுதி எச்சரிக்கை ஒலியாக இருக்கவேண்டும். பெண்களை துன்புறுத்துபவர்கள், தற்கொலைக்குத் தூண்டுபவர்கள் என எல்லோரின் முக மூடிகளையும் கிழிப்பதற்கு நாம் தயாராக வேண்டும். சட்டத்தின் பின்னால் ஒளிந்துகொண்டு தன் குற்றங்களை பணத்தினால் விலைக்கு வாங்க நினைப்பவர்களை சமூக நீதியின் பெயரால் தண்டனை பெற வைக்கவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களின் வலிகளை உள்ளார்ந்து உணருபவர்களாக தனிமனிதன் ஒவ்வொருவனையும் மாற்ற வேண்டிய தேவை எம் சமூகத்திற்கு உண்டு. அது தனிமனித முயற்சியினால் சாத்தியமாகக் கூடியதும் அல்ல. சமூகஞ்சார் கூட்டு உளவியலின் இணைப்பு அது. ஆயினும் தனியன்களாகிய எம் ஒவ்வொருவரும் கூட்டுப்பொறுப்பில் இணைவதன் மூலமே அது சாத்தியமாகும்.

காலத்துக்குக் காலம் இழப்புக்களை சந்திக்கும் போது மாத்திரம் சமூகஞ்சார் கூட்டுப் பொறுப்புக்கூறலைக் கையிலெடுத்துக் கூச்சலிட்டு, கூச்சல்களின் வீச்சங்கள் சிறிது சிறிதாக அடங்கிப்போக மீண்டும் பொறுப்பற்றவர்களாகாமலும், பெண்கள் சார்ந்தும் அவர்களது உரிமைகள் சார்ந்தும் பல்லாயிரக்கணக்கான பணச்செலவில் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருபவர்கள் வெறுமனே காகிதங்களில் மாத்திரம் அடைவு நிலைகளைக் காட்டாமலும் செயற்படுதல்

அவசியமாகின்றது. தொடரும் இந்த வன்முறைகளால் இன்று பெண்களுக்குக் கிடைத்திருக்கும் இயங்குவெளியின் அளவும் குறையக்கூடிய சாத்தியங்களே தென்படுகின்றன. குறுகிய வெளிக்குள் மட்டுப்பாடாக எம் குரல்களைக் கொடுக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுவோம். எமக்காகக் குரல்கொடுக்கும் உரிமையை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நடந்து முடிந்த பிறகு ஆர்ப்பாட்டங்கள் செய்வதை விட வருமுன் காக்கும் வழிமுறைகள் மனித அவலங்களிற்கு நீதி கொடுக்கும் சாட்சியங்களாக மாறவேண்டும்.

இழந்த பிறகு, எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் தலைவர்கள் வருவார்கள். அவர்களால் எம் வலிகளை புரிந்துகொள்ளவும் முடியாது. . எம் வலிகளின் மேல் அவர்கள் ஆசனங்களைப் போட்டிருக்கிறார்கள். கந்தகச் செருப்புக்களுக்கு அவர்கள் காவல் காக்க . கந்தகச் செருப்புக்கள் அவர்களைக் காவல் காக்கின்றன. பட்டினியின் வலி பட்டினியில் இருப்பவனாலேயே உணர்ந்துகொள்ள முடியும். பசியிலிருக்கும் பணக்காரனுக்கு பட்டினி தொடர்பான விளக்கத்தைக் கேட்க முடியுமே தவிர, அதனை உணர்வது யதார்த்தமானதாக இருக்க முடியாது. இவ்வலிகளைப் புரிய மறுத்தலை விடுத்து புரிந்துகொள்ள முயற்சியாவது செய்வோம். பாதிக்கப்படக்கூடிய நிலையை மட்டுமல்லாது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிலையையும் சமூகமும் சமூகஞ்சார் கட்டமைப்புக்களும் உருவாக்குகின்றன என்பதும் உணரப்படவேண்டியதாகும்.

பகலவனின் ஒளியில் அழகாகத் தெரிந்த தீவகம் இருட்டில் மயான அமைதியில் சலனங்களற்று கிடந்தது. அந்த மயான அமைதியில் மீண்டும் பயணிக்கும்போது உயிரின் வலியை உணர்ந்துகொள்ள முடிந்தது. குண்டூசியின் சத்தம் கூட இல்லாத அந்த அந்தகாரத்தில் யானை பிளிறினால் கூட குரல் கேட்டு ஓடி வர மனித சஞ்சாரமே இல்லை. அந்த அந்தகாரத்தில் வித்தியாவின் ஒலியும் மரங்களை ஊடுருவி அந்த உப்புக் காற்றினுள் பரந்து கிடக்கின்றது. இதற்குச் சாட்சிகளாக மரங்களும் முட்களும் மௌனித்துப்போயிருக்கின்றன. அந்தச் சாட்சியங்களை உணர்ந்து கொள்ளக்கூடிய வலிமை மனிதர்களுக்கு எப்போது வரும்?

## நீங்கள் ஸ்மார் போன் பறன்படுத்துபவரா?



உங்கள் ஸ்மார்ட் போனை எடுத்து ஒரு முத்தம் கொடுங்கள்!

நீங்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா என்பதை ஸ்மார்ட் போனில் பாவிக்கக்கூடிய ஒரு உதவியூட்டியால் கண்டுபிடிக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

ஒருவர் பாவிக்கும் ஸ்மார்ட் போனிலிருந்து எடுக்கப்படும் விபரங்களைவைத்து 86.5 விகிதம் அம்மனிதரின் மன அழுத்த நிலையைக் கண்டுபிடிக்க முடிகிறது.

நன்றி

ஒரு நாட்டின் மக்கள் எவ்வளவு சுபீட்சமாக வாழ்கிறார்கள் என்பதன் அடையாளங்களில் ஒன்று, அந்த நாட்டில் பிறக்கும் பிள்ளைகளில் எத்தனை பேர் தமது ஐந்து வயதைத் தாண்டி வாழ்கிறார்கள் என்பதுமாகும்.

பாகிஸ்தானில் பிறக்கும் 14 பிள்ளைகளில் ஒருவர் தனது முதலாவது வயதைத் தாண்டுவதில்லை. 11 பிள்ளைகளில் ஒருவர் தனது ஐந்தாவது வயதைத் தாண்டுவதில்லை.

அது இந்தியாவின் நிலைமையைவிட இரண்டு மடங்கு மோசமானது.



# வலிசுமந்து

*கொற்றவன்*




**அமரர் ஜோண்மரியசீலன் ஜெஸ்ரின்பீலிக்ஸ் (றேகன்)**
**மண்ணில்**
**05-10-1984 - 11-05-2015**

அது 1999-ம்ஆண்டின்நடுப்பகுதி. சிங்கள ஆக்கிரமிப்புப்படைகள் வன்னிப்பெருநிலப்பரப்பில் அகலக்கால்பதித்திருந்தகாலம். தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வயது வேறுபாடின்றி பாடசாலை மாணவர் களும் இளைஞர்களும் சுயவிருப்பிலேயே தங்களை விடுதலைப்போராட்டத்தில் இணைத்துக்கொண்டிருந்த காலமது. இவ்வாறு சுயமாகவே விடுதலைப்போராட்டத்தில் இணைந்த புதியவர்களை சிறந்த போராளிகளாக்புடம் போடுவதற்காக அரவணைத்துக்கொண்டது முல்லைத்தீவுமாவட்டத்தில் இயற்கை எளில்மிகுந்த முத்தையன் கட்டுக்கானகம். அப்போதுதான் றேகன் என்று பின்நாட்களில் நான் அவனையும் அவன் என்னையும் ஆழமாக நேசிக்கப்போகும் நண்பனான வேலரசன் அறி முகமானான். அப்போது அவனுக்கு பதினைந்துவயது. சிறியர்ருவம். மிடுக்கானதோற்றம். இவனைப்போலவே இவனையொத்தவயதுடைய இன்னுமபலர் வந்திருந்தபடியால் இவர்கள் எல்லோரையும் இணைத்து ஒரு அணியாக அதாவது முதலாவது அணியாகப்பிரித்திருந்தார்கள். அந்த அணியிலேயே வேலரசன் இடம்பெற்றிருந்தான். நான் பெரியவர்களின் அணியான மூன்றாவது அணியில் இடம்பெற்றிருந் தேன்.

அந்தநாட்களில் வேலரசனுடன் நெருக்கமாக நட்புக்கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. சுமார் இரண்டரை மாதத்திற்குமேலாக உடல் உளக்கற்கைநெறிகளால் தேர்ச்சிபெற்று ஆற்றல்மிகுந்த போராளிகளாகப் புடம்போடப்பட்டு இரண்டரைமாதத்திற் குமேலாக எம்மை அரவணைத்த அந்தக் கானகத்திற்கு விடைகொடுக்கும் நாளும்வந்தது. அந்தநாளில் நான் வேலரசன் உள்ளடங்கலாக இருபதுபேர் மருத்துவக்கல்வி கற்பதற்காக தேர்வுசெய்யப்பட்டோம். மற்றயவர்கள் அனைவரும் அன்றையநாளில் முன்னணிப்பொறுப்பாளரும் 2006-ம்ஆண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டவருமான லெப் கேணல் அக்பர் அவர்களின் தலைமையிலான அணியில் இணைக்கப்பட்டார்கள். காரிருள்வேளையில் கருமுகில்கள் வானத்தைச்சூழ்ந்து மழைபெய்து ஓய்ந்து தூறல்கள் ஆங்காங்கே சொட்ட ஓங்கிஉயர்ந்த மரங்களைக்கொண்ட அந்த இயற்கைவனத்திற்கு விடைகொடுத்து உழவுஇயந்திரத்தில் புறப்பட்டோம்.

அன்றையநாட்கள் வீதிகள் படு மோசமானவை. கிரவல்ப் புழுதிகளைக்கிளப்பியவாறும் கிடங்குபள்ளங்களில் குலுங்கியபடியும் ஒருவாறாக நாம் சென்ற உழவுஇயந்திரம் விசுவமடுவரையிலும் சென்று அங்கு குறிப்பிட்ட ஓரிடத்தில் போராளிகளுக்கான மருத்துவமனை ஒன்றில் எங்களை இறக்கிவிட்டது. அங்கு அரைச்சுவரால் கட்டப்பட்ட நீளமான கொட்டில்தான் எம்மை உள்வாங்கிக்கொண்டது. அந்தக்கொட்டில்தான் ஆரம்பமருத்துவம் படிப்பவர்களின் கல்விக்கூடமும் அதுதான். அவர்கள் தங்கும் தங்குமிடமும் அதுதான். இங்குதான் எனக்கும் வேலரசனுக்குமிடையிலான உறவுப்பாலத்தின் தொடக்கப்புள்ளி என நினைக்கிறேன்.

நாம் மருத்துவம்படித்த நாட்களில் மருத்துவப்படிப்பிலும்சரி மருத்துவச்செயன்முறைகளிலும்சரி அனைத்தையும் இலகுவாக விளங்கிக்கொள்கின்றதன்மை வேலரசனிடத்தில் இருந்ததை நாம் அப்போதே



இனம்கண்டுகொண்டோம். அத்துடன் மருத்துவக்கல்வியிலும் வேலரசனுக்கு கூடிய அக்கறை இருந்ததை அன்றையநாட்களில் நாம் அவதானித்திருந்தோம். அவனது வயதுக்கு மிஞ்சிய விவேகமும் கல்வித்திறமையும் குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் சார்ந்திருந்த பிரிவின் மருத்துவப்பொறுப்பாளர் தோமஸ்அண்ணையின் கவனத்தை ஈர்ந்திருந்தது. மருத்துவம் படித்தநாட்களில் வேலரசனோடு பழகியநாட்கள் அவனுடனும் மற்றயநண்பர் களுடனும் பகிடிவிட்டு பம்பலடித்து சாப்பிட்ட நாட்கள் அவன் சாப்பாடு பரிமாறிய தேனீர் பரிமாறிய நாட்கள் அவனை வேலு வேலு என்று நாங்கள் செல்லமாக அழைத்தநாட்கள் ஒருகூட்டுப்பறவைகளாக நாம் வாழ்ந்தநாட்கள் எல்லாம் இன்றும் எனது மனதில் பசுமரத்தாணிபோலப்பதிவாகியுள்ளது. அந்தநாட்களில்தான் விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள்-03 நிலமீட்புப்போர் தொடங்கியிருந்தது. ஒட்டுசுட்டான் பிரதேசம் மீட்கப்பட்டவுடன் ஒரு எழுச்சிப்பாடல் ஒன்று வெளியா கியிருந்தது. அதுதான் "எட்டுத்திக்கும் வெற்றிமுரசு கொட்டு ஒட்டுசுட்டான் மண்ணில்நின்று தட்டு.."இந்தப்பாடல் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்தப்பாடல்வரிகளை அன்றையநாட்களில் அவனது வாய் அடிக்கடி முணுமுணுக்கும். இவனிடம் காணப்பட்ட வயதுக்கு மிஞ்சிய இன்னுமொரு திறமையையும் குறிப்பிட்டேயாகவேண்டும். அதாவது கல்வியில் மாத்திரமல்ல ஒரு போராளிக்கு இருக்கவேண்டிய திறமைகளில் குறிபார்த்துச்சுடுவதிலும் தான் சளைத்தவனல்ல என்பதையும் அன்றையநாட்களில் நிரூபித்துக்காட்டியிருந்தான். அடிப்படைப்பயிற்சியின்போதும் பின்னர் மருத்துவம் படித்தநாட்களிலும் அவ்வவ்ப்போது சூட்டுப்பயிற்சிகள் இடம்பெறுவது வழக்கம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வேலரசன் நல்ல ஸ்கோர் எடுப்பான்.

அந்தநாட்களில் ஓயாதஅலைகள்-03 தொடர் நிலமீட்புச்சமர் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. அப்போது மருத்துவம் படித்துக்கொண்டிருந்த எமக்கு மருத்துவஅனுபவமும் அவசியம் என்பதற்கமைவாக போர்க்களங்களில் விழுப்புண்பட்டு மேலதிகசிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் மருத்துவமனைகளில் போராளிகளைப்பராமரிக்கவும் அவர்களுக்கு மருத்து வஉதவியாளர்களாகச்செயற்படுவதற்காகவும் எம்மை மூன்று அணிகளாகப்பிரித்து வெவ்வேறு போரா-ளிகளின் மருத்துவமனைகளுக்கு குறிப்பிட்டநாட்கள் அனுப்பிவைத்தார்கள். இவ்வாறாக போராளிகளின் மருத்துவமனை ஒன்றுக்குச்சென்றிருந்த வேலரசன் தன்னிலும் வயதுகூடிய போராளிகளைப்பராமரித்து அவர்களுக்கான மருத்துவத்தேவைகளையும் நிவர்த்திசெய்து அங்கு கடமையாற்றிய போராளிமருத்துவர்களோடு கடமையாற்றிய அனுபவமும் பட்டறிவுமே பின்னாட்களில் அவன் பயிற்சிமுகாமுக்கும் அணிகளுக்கும் ஆளுமைமிக்க மருத்துவ போராளியாகச்செயற்படுவதற்கு வழிசமைத்திருந்தது. குறிப்பிட்டநாட்களின்பின்னர் எமது பிரிவுக்கான மருத்துவமனைக்கு வந்து மீண்டும் மருத்துவக்கல்வியைத் தொடர்ந்தோம்.

சுமார் எட்டு மாதங்களாகத்தொடர்ந்த எமது ஆரம்பமருத்துவக்கல்லூரி நிறைவுறும் காலமும் வந்தது. எமக்கான மருத்துவஇறுதித்தேர்வும் நடைபெற்றது. அந்தத்தேர்விலும் வேலரசன் அதிகூடியபுள்ளிகளைப்பெற்று அன்றையநாட்களின் அரசியல்த்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வண்ணை யிடமிருந்தும் தளபதி ஆதவண்ணையிடமிருந்தும் (கடாபி) சான்றிதழ்களைப்பெற்றிருந்தான் வேலரசன். 2000-ம்ஆண்டு யூன்மாதம் 14-ம்திகதி எமது ஆரம்பமருத்துவப்படிப்பு நிறைவுற்றதும் வேலரசனது ஆளுமையைககருத்திற்கொண்ட எமது பொறுப்பாளர் தோமஸ் அண்ணா வேலரசனை புதியபோராளிகளுக்கான அடிப்படைப்பயிற்சிமுகாம் ஒன்றுக்கான மருத்துவப்போராளியாக நியமித்திருந்தார். அப்போது அவனுக்கு பதினாறுவயது. அந்தப்பயிற்சிமுகாமில் நூற்றுக்கும்

மேற்பட்ட போராளிகளுக்கு தனியொருவனாகநின்று மருத்துவம் செய்வதென்பது சாதாரணவிடயமல்ல. ஆனாலும் அந்தப்பணியை மிகவும் செவ்வனே செய்திருந்தான்

வேலரசன். தொடர்ந்து 2001-ம்ஆண்டின் முற்பகுதியில் நான் பிரிவுமாற்றம்பெற்று மற்றொரு பிரிவில் நெய்தல்நில மக்களுக்கான அரசியல்ப்பணியை முன்னெடுத்துக்கொண்டிருந்த காலப்பகுதியில் தோமஸ் அண்ணா பணிநிமிர்த்தமாக பிரிவுமாற்றம் பெற்றுச்சென்றுவிட மருத்துவப்பொறுப்பை எளிலன்அண்ணா பொறுப்பேற்றுக்கொண்டார். அந்தக்காலப்பகுதியில் வேலரசன்தான் அந்த மருத்துவமனையின் நிர்வாகப்பொறுப்பாளராக குறிப்பிட்டகாலம் கடமையாற்றியதாகவும் கேள்வியுற்றேன். இதன்பிற்பாடு சிலகாலங்கள் நானும் வேலரசனும் சந்தித்துக்கொள்வது மிகவும் அரிதாகவேயிருந்தது. இருவரது கடமைகளும் இருவரையும் வெவ்வேறு தளங்களில் பிரித்திருந்தது. எப்போதோ ஓரிருதடவைகள் கீர்த்திகா மருத்துவமனையிலும் புதுக்குடியிருப்பிலும் சந்தித்துக்கதைத்த நினைவிருக்கின்றது.

காலங்கள் உருண்டோடி 2006-ம்ஆண்டும்வந்தது. தரைசாஉந்த குறிப்பிட்ட ஒரு பிரிவிலிருந்து ஒரு தொகுதி போராளிகள் கடல்சார்ந்த நடவடிக்கைகளுக்காக வந்திருந்தாஉகள். அந்தப்போராளிகளில் ஒரு வனாக வேலரசனும் வந்திருந்தான். சுமார் நான்கு வருடங்களுக்குமேலாக நெய்தல்நிலமக்களுக்கான அரசியல்ப்பணியை முன்னெடுத்திருந்த நான் அந்தக்காலப்பகுதியில் அந்தப்பணியிலிருந்து ஒதுங்கி முல்லைத் தீவு-சிலாவத்தைப்பகுதியில் கடல்சார்ந்த பயிற்சிகளில் ஈடுபடும் போராளிகளுக்கான முகாம் ஒன்றில் மருத்துவப்போராளியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தேன். அப்போதுதான் பணிநிமிஉத்தமாக வேலரசன் அந்த முகாமுக்கு வந்திருந்தான். நீண்டகாலம் பிரிந்திருந்த எமது நட்புறவு மீண்டும் பற்றுறுதியுடன் தொடர்ந்தது. அது வெறும் நட்பாகமட்டுமன்றி சகோதரத்துவ நட்பாகப்பரிணமித்தது. நீண்டகாலத்திற்குப்பிறகு சிலாவத்தைக்கடற்கரை மணலிலிருந்து நானும் அவனும் பழையநினைவுகளை மீட்டிக்கதைத்தவை. எனக்குத்தரப்பட்டிருந்த சிறியஉந்துருளியில் அவன் என்னை ஏற்றிக்கொண்டு வட்டுவாகல்முகாமுக்குச்சென்று பின்னர் அப்படியே புதுக்குடியிருப்புவரையிலும் சென்றுவந்தது எல்லாமே எனது மனக்கணமுன் நிழலாடுகின்றது. ஆரம்பநாட்களில் என்னை “அண்ணா”என்று அழைத்த வேலரசன் அந்தநாட்களில்தான் “ப்ரெண்ட்ஸ்” என்று அழைக்கத்தொடங்கியிருந்தான். அன்றிலிருந்து அவன் சாவடையும் நாள்வரையிலும் அவன் “ப்ரெண்ட்ஸ்” என்றேதான் என்னை அழைத்தான். ஒருவாரமாக அந்தமுகாமில் என்னுடன் தங்கியிருந்த வேலரசன் பின்னர் வட்டுவாகலில் அமையப்பெற்றிருந்த மற்றுமோர் கடல்சார் நடவடிக்கைக்கான முகாமிற்கு கடமைக்காகச்சென்றிருந்தான். நான் பணிநிமிர்த்தமாக புதுக்குடியிருப்புக்குச் செல்கின்ற சந்தர்ப்பங்களில் வேலரசனைப்பார்ப்பதற்கென்றே அவன்நின்ற வட்டுவாகல்முகாமுக்கு சென்றுவருவதை வழக்கமாக்கிக்கொண்டேன். இவ்வாறு அவனைப்பார்ப்பதற்கென்று சென்ற ஒருநாளில்தான் அக்பரண்ணை வீரச்சாவடைந்துவிட்டார் என்ற செய்தியையும் வேலரசன்தான் எனக்கு முதலில் கூறியிருந்தான். இதன்பின்னர் ஓர்நாளில் சிலாவத்தைமுகாமில் நான் தனித்துநின்றவேளையில் வெளியில் யாரோ கூப்பிடுவதுபோல்க்கேட்டது. சென்றுபாஉத்தபோது வேலரசன் ஈரஉடையோடு நின்றிருந்தான். சிறியவகை இயந்திரப்படகொன்றை வட்டுவாகலிலிருந்து கடல்வழியாக தனியாக ஓட்டிவந்த வேலரசனுக்கு 2வு ஒயில் தேவைப்பட்டிருக்கின்றது. அந்தமுகாமில் என்னைச்சந்திக்கலாம் என்ற நம்பிக்கையில் படகை கரையில் ஏற்றிவிட்டு முழு மையாக உப்புநீரால் நனைந்தபடி வந்து குறித்த ஒயில் இருந்தால் தருமாறு கேட்டான். எனது உந்துருளித்தேவைக்காக வைத்திருந்த ஒயிலை எடுத்துக்கொடுத்துவிட்டேன். அதைவாங்கிக்கொண்டு அவசரமாகச்சென்றுவிட்டான். இதன்பின்னர்நான் அவனை விசாரித்தபோது வேலரசன் வட்டுவாகல்முகாமில் இல்லையென்றும் அவன் கடமையாற்றிய தரைசார்ந்த அணிக்கே மீண்டும் சென்றுவிட்டான் என்றும் அறிந்துகொண்டேன். அத்துடன் அவன் ஓர் சிறந்த வாகனச்சாரதியாகவும் செயற்படுவதையும கேள்வியுற்றேன். இதன்பின்னர் 2007-ம்ஆண்டுகாலப்பகுதியில் நான் புதுக்குடியிருப்பைத் தளமாகக்கொண்டு எனது கடமைகளை முன்னெடுத்துக்கொண்டிருந்த காலப்பகுதியில் நான் எனது சிறியஉந்துருளியில் புதுக்குடியிருப்பை நோக்கிச்சென்றுகொண்டிருந்த ஓர்நாளில் என்னை விலத்திச்சென்ற கயஸ்வாகனம் ஒன்று கோண்அடித்து என்னை நிற்கும்படி சைகை செய்து வாகனம் நின்றது. உடனே நான் உந்துருளியை நிறுத்தியபோது வாகனத்திலிருந்து வேலரசன் இறங்கிவந்து நீண்டநாட்களின்

பின்னர் சந்தித்த சந்தோசத்தில் இருவரும் அளவளாவிக்க தைத்துவிட்டு"சந்திப்போம்" என்று கூறிவிட்டுச்சென்றான். அதன்பின்னரும் சிலதடவைகள் சந்தித்துக்கொண்ட நினைவிருக்கின்றது. தொடர்ந்து 2008-ம்ஆண்டுகாலப்பகுதியில் நிதித்துறைப் பொறுப்பாளராகவிருந்த தமிழேந்திஅப்பா படைத்துறைச்செயலராக தேசியத்தலைவர் அவர் களால் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தக்காலப்பகுதியில் வேலரசன்தான் தமிழேந்தியப்பாவின் பிரத்தியேகவாகனச்சாரதியாக செயற்படுவதை கேள்வியுற்றேன். 2008-ம்ஆண்டு ஒக்டோபஉமாதத்தில் ஒஉநாள் புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த தளபதி சூசைஅவர்களின் சந்திப்புமுகாமிற்குச்சென்றிருந்தே தன். அன்றையநாட்களில் எனது பணிநிமிர்த்தமாக நான் அங்கு செல்வது வழக்கமாகவிருந்தது. அவ்வாறு சென்ற ஓர்நாளில்த்தான் முகாம்வாசலில் ஏனயசில போராளிகளோடு நண்பன் வேலரசனும் நின்றிருந்தான்.



முகாமின் உள்ளே

தளபதி சூசைஅவர்களுக்கும் தமிழேந்தியப்பாவிற்கும் சந்திப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போதுதான் தமிழேந்தியப்பாவுக்கு தான் வாகனச்சாரதியாகச்செயற்படுவதை கூறிய தோடு மேலும்பலவிடயங்களை நட்புரீதியாகக் கதைத்துக்கொண்டோம். தொடர்ந்துவந்தநாட்களில் வன்னியில் போர் உக்கிரமடைந்து 2009-ம்ஆண்டு மேமாதம் முள்ளிவாய்க்காலில் எமது ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்றதன்பிற்பாடு அரசபடையினரின் கண்காணிப்பில் செயற்பட்டுக்கொண்டிருந்த சரணடைந்த போராளிக ளைத்தடுத்துவைத்திருக்கின்ற வவுனியா-பம்பைமடு புனர்வாழ்வுநிலையத்தில் நானும் வேலரசனும் மீண்டும் இணைந்துகொண்டோம். அவனுக்கு பெற்றோர் ஜெஸ்ரின் பீலிக்ஸ் என்று பெயரிட்டு செல்லமாக றேகன் என்றே அழைத்துவந்தனர். மீண்டும் றேகனாக பம்மைமடு புனர்வாழ்வுநிலையத்தில் எங்கள் இருவருக்குமான நட்புறவு புதுவீச்சுடன் தொடர்ந்தது.

அந்தநாட்களில் கூடியபொழுதுகளை இருவரும் ஒன்றாகவே கழித்தோம். எமது கடந்தகால வாழ்க்கைக்கதைகள் தனிப்பட்டகதைகள் என அனைத்தையும் மனம்விட்டுப்பேசுகின்றளவுக்கு எமது நட்பின்பிணைப்பு மிகவும் இறுக்கமானது. அவனுக்கு உறவினர் சந்திப்பில் வீட்டிலிருந்து சாப்பாடு வந்தால் சாப்பாட்டுப்பார்சல் பிரிக்காது எனது வரவுக்காக காத்திருப்பான். நான்வந்ததும்சாப்பாட்டு ப்பார்சல்பிரித்து

நான்கைவைத்து சாப்பிட்டதன் பின்னர்தான் தான் சாப்பிடுவான். அப்போதுதான் அவன் என்னில் வைத்திருக்கும் அன்பின் ஆழத்தை அறிந்துகொண்டேன்.

இரவுநேரம் நித்திரைக்குமட்டும்தான் நான் எனது கொட்டிலுக்கு வருவதுவழக்கம். மற்றும்படி அவனும் நானும் ஒன்றாகவே இருந்தோம். அந்தப்புனர் வாழ்வுமுகாமில் எங்கு செல்வதென்றாலும் இருவரும் ஒன்றாகவே ஒட்டிக்கொண்டே திரிந்தோம். இந்த நாட்களில்த்தான் அளவுக்கதிகமான பாசத்தை அவனிடத்தில் அள்ளிச்சொரிந்தேன். அவனும் "ப்ரெண்ட்ஸ் ப்ரெண்ட்ஸ்" என்று என்னையே வலம்வந்துகொண்டிருந்தான். அந்தநாட்களில் எனது நண்பன் றேகனுடன்

பழகிய பொழுதுகளை இப்போதும் நினைக்கும்போது எனது இதயம் ரணமாக வலிக்கிறது. இவ்வாறு எமது நட்பு இணைபிரியாதநட்பாகத்தொடர்ந்த காலத்தில் சுமார் எட்டு மாதங்களின்பின்னஉ நண்பன் றேகனை வெலிக்கந்தையிலுள்ள கந்தக்காடு புனர்வாழ்வுமுகாமுக்கும் என்னை வவுனியாவிலுள்ள உலுக்குளம் புனஉவாழ்வுமுகாமிற்கும் மாற்றிவிட்டார்கள். குறிப்பிட்டமாதங்களின்பின்னர் எங்களை வவுனியாவிலுள்ள கம்பஸ் புனர்வாழ்வுமுகாமுக்கு மாற்றியபின்னர் குறிப்பிட்டசிலநாட்கள் கையடக்கத் தொலைபேசிப்பாவனைக்கு அனுமதியளித்திருந்தார்கள். அந்தநாட்களில் ஒரு நாள் நண்பன்றேகனுடன்

தொலைபேசியில் கதைத்திருந்தேன்.

அடுத்துவந்தநாட்களில் தொலைபேசிப்பாவனையைத் தடைசெய்துவிட்டார்கள். கந்தக்காட்டிலிருந்து வந்தவர்களிடம் எனது நண்பனைப்பற்றி நலம்விசாரித்து அறிந்துகொண்டேன். தொடர்ந்து 2011-ம்ஆண்டு யூலைமாதம் 04-ம்திகதி அனைத்து புனர்வாழ்வுநிலையங்களிலிருந்தும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் குறிப்பிட்டதொகையினரை விடுதலைசெய்வதற்கு புனர்வாழ்வு அமைச்சு சிபார்சு செய்திருந்தது. விடுதலையாகும் தொகுதியில் கம்பஸ் முகாமிலிருந்து நானும் கந்தக்காடு முகாமிலிருந்து றேகனும் சிபாஉசுசெய்யப்பட்டிருந்தோம். குறித்த 2011-ம்ஆண்டு யூலைமாதம் 04-ம்திகதிக்கு சிலநாட்களுக்குமுன்னர் கந்தக்காடு புனர்வாழ்வுமுகாமில் விடுதலைக்கு சிபார்சுசெய்யப்பட்டிருந்த அனைவரும் நான் தங்கிநின்ற கம்பஸ் புனர்வாழ்வுமுகாமுக்கு கொண்டுவரப்பட்டிருந்தார்கள். அந்தத்தொகுதியில் நண்பன் றேகனும் வந்திருந்தான். நாம் இருவரும் மீண்டும் இணைந்துகொண்டோம். இருவரும் ஒரேநாளில் விடுதலையாகப்போகின்றோம் என்று உள்ளம் பூரித்துப்போனோம். றேகனின் விடுதலைக்கான செயற்பாடுகள் அனைத்தும் பூஉத்தியாகியது. எல்லாமே நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால் விதியோ வேறுவிதமாக விளையாடியது. விடுதலையாவதற்கான குறித்தநாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நண்பன் றேகனோடு இன்னும்சிலரின் விடுதலை இரத்தாகியது. ஆனாலும் அவன் மனம் தளரவில்லை. நான் விடுதலையானபோது நண்பன் றேகன் என்னை சந்தோசமாக வழியனுப்பிவைத்தான். தொடர்ந்துவந்தநாட்களில் றேகன் உள்ளிட்ட விடுதலை இரத்துச்செய்யப்பட்ட அனைவரையும் பூசா தடுப்புமுகாமிற்குக்கொண்டுசென்று அங்கு தடுத்துவைத்தார்கள். விடுதலையாகிவந்த நான் றேகன் ஏற்கனவே எனக்குத்தந்திருந்த அவனது வீட்டுப்போன்நம்பருக்கு போன்பண்ணி அவனது அம்மாவிடமும் அப்பாவிடமும் அவனது சுகநலன்களை விசாரித்துக்கொண்டேன்.

காலநீட்சியில் 2012-ம்ஆண்டின் பிற்பகுதியில் நான கடல்கடந்ததேசம் ஒன்றில் புகலிடம்தேடிவந்து குடிவரவுத்தடுப்புமுகாமிலிருந்து 2013-ம்ஆண்டு விடுதலையாகி சமூகத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் நண்பன் றேகன் எங்கிருக்கின்றான் என்பதும் தெரியாமல் அவனது தொடர்பு எப்படியாவது கிடைத்துவிடவேண்டும் என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்தேன். அவன் தந்திருந்த அவனது வீட்டுப்போன்நம்பர் அடங்கிய ஆவணம் எதுவும் நான் இங்கு வரும்போது எடுத்துவந்திருக்கவில்லை. அதற்கு நான் மேற்கொண்ட இடர்மிகுந்த கடற்பயணமும் இடம்கொடுக்கவில்லை. இந்தக்காலப்பகுதியில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த றேகன் நான் கடல்கடந்த தேசத்திற்கு வந்துவிட்டதை அறிந்து என்னுடன் தொடர்புகொள்வதற்கு கடும்முயற்சிகள் எடுத்திருந்தான். எங்கள் இருவருக்குமிடையிலான நட்புறவு எள்ளளவுகூட கள்ளம்கபடமற்ற உண்மையானதும் நேர்மையானதுமாகும். அதிஸ்ரம் அவன் பக்கமேயிருந்தது. அவனது முயற்சி வீண்போகவில்லை. இந்தத்தேசத்தில் இருந்த அவனது மற்றுமோர் நண்பன் ஒருவனுக்கூடாக ஒருவாறாக எனது போன்நம்பரை எடுத்து அவன்தான் முதலில் என்னைத் தொடர்புகொண்டான். நான் கடல்கடந்ததேசத்திற்கு வந்ததையிட்டு அவன் மிகவும் சந்தோசப்பட்டான். மீண்டும் நண்பன் றேகனது தொடர்பு கிடைத்த காலப்பகுதி 2014-ம்ஆண்டு யூன்மாதம். அன்றிலிருந்து அவன் 08-05-2015இல் விடுதலையாகிவந்து 10-05-2015இல் விபத்திற்குள்ளாகும்வரையிலும் எங்கள் இருவருக்குமிடையிலான நட்புறவு தொலைபேசியூடாகவும் முகநூலுக்கு ஊடாகவும் தொடர்ந்துகொண்டேயிருந்தது. எவ்வளவோ எதிர் காலக்கனவுகள் அவனிடம் இருந்தது. அவனுக்கு பல நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் அவன் தனது தனிப்பட்டவிடயங்களை மனம்விட்டுப்பேசும் ஒரேயொரு நண்பன் நானாகத்தானிருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. ஏற்கனவே எதிர்பார்த்ததற்கமைவாக 08-05-2015 வெள்ளிக்கிழமையன்று நீதிமனிறினால் நண்பன் றேகன் விடுதலை செய்யப்பட்டான். அன்றிரவே றேகனின் தம்பி றேமன்“அண்ணா விடுதலையாகிவிட்டார். நாளைக்கு உங்களுக்கு கோல் எடுப்பார் என்று குறுஞ்செய்தி ஊடாக எனக்கு அறிவித்திருந்தார். குறிப்பிட்டபடியே மறுநாள் 09-05-2015 சனிக்கிழமையன்று காலையிலேயே எனக்கு கோல் எடுத்தான். இருவரும் கதைத்தோம். நீண்டநேரம் கதைத்தோம். அடுத்துவரும் செவ்வாய்க்கிழமை ஸ்கைப்பில் கதைப்பதாக இருவரும் தீர்மானித்தோம். ஆனால் மறுநாள் 10-05-2015 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை வேளையில் உந்துருளியில் பயணித்தவேளையில் அவனுக்கு காலனாகவந்த உழவு இயந்திரத்தில் விபத்திற்குள்ளாகி சிகிச்சைகள் பலனின்றி அதற்

கடுத்தநாள் 11-05-2015 திங்கட்கிழமையன்று எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எனது ஆருயிர்நண்பன் ரேகன் விழிமூடி மீளாத்துயில்கொண்டுவிட்டான். ரேகனின் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் ரேகனின் இழப்பு என்பது ஈடுசெய்யமுடியாததும் ஜீரணிக்கமுடியாததுமான இழப்பாகும். எனது ஆருயிர்நண்பன் ரேகனின் சாவுச்செய்தி ஏற்றுக்கொள்ளமுடியாததொன்றாகத்தான் எனக்கு அமைந்திருக்கின்றது. அவனது இழப்பு எனது இதயத்தை வெகுவாகப்பாதித்திருக்கின்றது. அந்தத்தாக்கத்திலிருந்து இன்றுவரையும் நான் விடுபடவில்லை. அந்தத்தாக்கம் எனது ஆன்மாவை ரணமாக வலித்துக்கொண்டேயிருக்கின்றது.

இந்த நினைவுப்பதிவை எனது ஆருயிர்நண்பன் ரேகனின் புகழுடல் புதைக்கப்பட்டிருக்கும் வலைப்பாடு சேமக்காலையில் அவனது கல்லறையில் காணிக்கையாக்குகின்றேன்.

---

# வேப்பமரக் காற்றே...



சு.பா.ரஞ்சன்

நெடுத்து உயர்ந்து
நிழல் தந்து குடை பிடித்து
நிற்கிறது சாலையோரத்து
மரங்கள்...

ஒற்றையடிப் பாதை எல்லாம்
பற்றையாய் படர்ந்து
இதழ் விரித்து மணம் பரப்பி
நிற்கிறது காட்டு ரோஜாக்கள் ...

வழி வழியே வாஞ்சையோடு
பார்க்கின்றேன்
ஆறுதல் அளிக்கும் இந்தப்
பூக்களையும்
மரங்களையும்...

மனதுக்குள் புதைந்து போன
கிராமத்து பூக்களையும்
மூலிகைக் காற்றையும்
வேப்ப மர நிழலையும்....

மாமரத்து குயில்களும்
கொய்யாப்பழும்
கொறித்தஅணிலையும்
கொவ்வைப்பழும் தின்ற கிளியையும்
நினைத்துக் கொண்டு
நடக்கின்றேன்.....

# வன்னியில் ஒரு வெற்றிகரமான நூல் வெளியீடு

யோ.புரட்சி



செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிடும், கவிஞர் விசுவமடு கரீஸ் எழுதிய "முகவரிஅறியா முகவரி ஒன்றிற்காய்" கவிதை நூல் வெளியீடானது. வன்னியின் விசுவமடு சுண்டிக்குளம் புல்வெளியில் இடம்பெற்றது. வழமையான வெளியீட்டு அம்சங்களுக்கு அப்பால் புதுமையான அம்சங்களை வெளிப்படுத்தும் நூல் வெளியீடாக இதனைக் காண முடிந்தது. போர் முடிந்த வன்னியில் புதுமையான வெளியீடுகள் இடம்பெறுவதன் இன்னொரு பதிவாக இந்த வெளியீட்டினைச் சொல்லலாம். கரீஸ் வன்னியின் விசுவமடுப் பகுதியில் வசிக்கும் நல்லதொரு கவிஞர். இவரது முதலாவது கவிநூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.வாழை மரத்தில் வைக்கப்பட்டு சுடர்கள் ஏற்றப்பட்டது. நிகழ்வுக்கு பண்பலை வேந்தன் ரி.எஸ் முகுந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். ஆசியுரையை நாகதம்பிரான் ஆலய குருக்கள் சிவசிறீ சிதம்பரேஸ்வரக் குருக்கள் அவர்கள் வழங்கினார். வரவேற்புரையினை செல்லமுத்து வெளியீட்டக இயக்குனர் யோ.புரட்சி வழங்கினார். வாழ்த்துரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு சிவசக்தி ஆனந்தன் அவர்கள், மற்றும் திரு சிவஞானம் சிறீதரன் ஆகியோர் வழங்கினர். கனடா படைப்பாளிகள் உலகம் நிறுவுனர் திரு ஐங்கரன்கதிர்காமநாதன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியினை செல்வி சங்கீதா அளித்தார். நூலினை நாடாளுமன்ற உறுப்பினர் திரு சிவசக்தி ஆனந்தன் அவர்கள் வெளியிட, முதற் பிரதியினை நாடாளுமன்ற உறுப்பினர் திரு சிவஞானம் சிறீதரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை மக்கள் வங்கி பரந்தன் கிளை முகாமையாளர் கணபதி சிறீதரன் அவர்கள் வழங்கினார். வாழ்த்துக் கவிதைகளை பிள்ளைக்கவி ஜொய்சி, கவிஞர் முல்லைத்தீபன் ஆகியோர் வழங்கினர். நடனங்களை யாழ்ப்பானத்திலிருந்து வருகை தந்த வினிதா, விசுவமடு சுபேத, சுதந்திரபுரம் மோகனப்பிரியா ஆகியோர் வழங்கினர். இலண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவுனர் திரு வவுனியூர் உதயனன் அவர்களும் வாழ்த்துச்செய்தியினை வழங்கி இருந்தார். பண்பலை வேந்தன் ரி.எஸ் முகுந்தன் அவர்கள் தலைமையில் கவியரங்க வடிவ விமர்சனம், மற்றும் பட்டிமன்றம் என்பனவும் இடம்பெற்றது. கவியரங்கில் கவிஞர்கள் நெடுந்தீவு தனு, சிவரமணி, ஆர்.எஸ் கலா, ஆரதி, தனுஜா, புலவூரான் ரிஷி, கவிதாயினி ஜோதிமலர், மருத்துவர் மாதவராஜா, பண்டத்தரிப்பு வினேஸ் ஆகியோரும், பட்டிமன்றத்தில்

கம்பீரக்குரலோன் நாகேந்திரராசா,சைவப்புலவர் திலகானந்தம், பிருந்தாவனம் ஆசிரியர் சிவராணி, திரு ஆர்.ஜே. பிரகலாதன்(உடுவில்)திரு விக்ரர், கவிஞர் முல்லைத்தீபன் ஆகியோரும் பங்கெடுத்தனர். கவிஞர் கரீஸ், மற்றும் யோ.புரட்சி ஆகியோர்க்கு கனடா படைப்பாளிகள் உலகம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது. நிறைந்த உறவுகள் கூடிய இந்த நிகழ்வில் ஏற்புரையினை நூலாசிரியர் விசுவமடு கரீஸ் நிகழ்த்தினார். இந்த நிகழ்வானது நிறைவு பெறும்வரை பெருந்திரளானவர்கள் கூடி இருந்தமை இந்த நூல் வெளியீட்டுக்கு கிடைத்த நல்லதொரு வரவேற்பாகும். இந்த நிகழ்வில் நடனம் நிகழ்த்திய மோகனப்பிரியா இரு கண்களும் பார்வையற்றவர். இவரின் நடனம் எல்லோருக்குள்ளும் பல சிந்தனைகளை ஏற்படுத்தியது.

# கேள்விக்கென்ன பதில்

வாசு முருகவேல்



மிக எளிமையான கேள்விக்கு நம்மிடம் தீர்க்கமான பதில் இல்லை. அந்த ஒற்றைக் கேள்விக்கான பதிலை நாம் இத்தனை ஆண்டு போராட்ட காலத்தில் உருவாக்கி வைத்திருப்பின் இன்றைய பாரிய வெற்றிடம் உலக அரங்கில் நிரப்பப் பட்டிருக்கும். அந்த ஒற்றைக் கேள்வி... நமக்கான அரசியல் கட்டமைப்புத் தலைமைகள் எங்கே ?

ஈழப் போராட்ட காலத்தில் மிகப் பெரிய கள ரீதியான வெற்றிகளை நாம் பெற்றோம். உலகத்தை திரும்பிப் பார்க்க வைத்தோம். ஆனால் நமக்கான

அரசியலை உலக அரங்கில் எந்தக் கட்டமைப்புகள் பேசிக் கொண்டிருந்தன. ஒரு சிலர் இருந்திருக்கலாம். ஆனால் வெளிப்படையான ஒரு அரசியல் ரீதியான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு பயணிக்கவில்லை. நமது மக்களுக்கும் அவைகளில் ஒரு ஈடுபாடோ.நாட்டமோ அடிப்படையில் இருந்திருக்கவில்லை.

அந்த இடைவெளியை நிரப்பும் பொருட்டு நாட்டுக்குள் விடுதலைப் புலிகளால் ஒரு கட்டத்தில் வடிவமைக்கப்பட்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மிகத் தெளிவாக ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தோ அல்லது விடுதலைப் போராட்டத்தில் மிகுந்த நாட்டத்துடன் பயணிக்கும் மேன்மக்களில் இருந்தோ உருவானதில்லை.

அன்றைய கால கட்டத்தில் அரசியலில் பயணித்துக் கொண்டு இருந்த ஓரளவு அனுபவம் கொண்ட

சிலரைத் தேர்வு செய்து உருவாக்கப் பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஒரு அவசர தேவைக்கான முடிவு போலவே இது உருவானது. உள்நாட்டில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பு தன்னில் இருந்தோ அல்லது தனது விசுவாசிகளில் இருந்து இப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்குவது சாத்தியம் இல்லை. அப்படி உருவானால் அவர்கள் தடை செய்யப்பட்டவர்கள் பட்டியலில் வருவார்கள்.வந்திருப்பார்கள். அவர்கள் இலங்கை அரசியலில் பங்கெடுக்கவோ நாடாள மன்றம் செல்வதோ துளி அளவும் சாத்தியம் இல்லை. இது தவிர்க்க முடியாத ஒரு முடிவு.

இதே கால கட்டத்தில் ஏன் புலம் பெயர்ந்த சமூகத்தில் நாம் அரசியல் கட்டமைப்புகளை உருவாக்கி வைக்கத் தவறினோம்?. இன்றைக்கு உருவாகி இருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்பது மிக முக்கியம் என்ற போதிலும். இதே கட்டமைப்பு.சில அடிமட்ட அளவிலாவது நீண்ட காலத்துக்கு முன் தொடங்கப் பட்டிருக்க வேண்டும். தமிழ் ஈழ மக்கள் அதன் கீழான தொடர்புகளை மேற்கொண்டிருக்க வேண்டும். அது ஒரு முக்கிய கட்டமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு பல பிரிவுகளாக இயங்கும் வழக்கம் என்பது மட்டுப் படுத்தப்பட்டிருக்கும். ஒரு தலைமையின் கீழ் மக்கள் அடிப்படையில் மக்கள் சேர்ந்திருக்கும் பட்சத்தில் அதன் பலம் மிகப் பெரிதாக இருந்திருக்கும்.

இன்றைக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைப்

பேசுவோம் என்று ஒரு விவாதம் வருகின்ற போது.ஏழு அமைப்புகளை தமிழர் சார்பில் அழைக்க வேண்டும். இல்லையில்லை எட்டு அமைப்புகளை அழைக்க வேண்டும் என்று. இதுவே ஒரு சிக்கலாக ஆகியும்

விட்டது. இன்றைக்கு இதை நாம் தவிர்க்கவும் முடியாத நிலையில் நிற்கின்றோம். இது கடந்த கால தெளிவற்ற வெளிப்படையான அரசியல் கட்டமைப்பை உண்டாக்காததின் பின் விளைவாக இன்று நெருக்கடிக்குள் நம்மைத் தள்ளிக் கொண்டு நிற்கிறது.

2009க்கு பின் முழுமையாக அரசியல் கட்டமைப்புகளை கொண்டே விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டோம். ஆனால். 2015 வரை நாம் ஒரு தீர்க்கமான அரசியல் கட்டமைப்பை உருவாக்கி உள்ளோமா ? அதன் ஆதார சக்தியாக முன் நகர்கிறோமா? என்றால் யதார்த்தத்தில் இல்லை. உலகத்தின் எந்த நாடும் கவனிக்கும் அளவில் நாம் ஒரு இன விடுதலை அரசியல் சக்தியாக ஒரு அடையாளத்தில் இல்லை.

ஒரு அமெரிக்க அரசியல்வாதி ஈழம் தொடர்பான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று கருதுகிறார். அவர் உடனடியாக ஒரு ஈழமக்களின் பிரதிநிதியை தொடர்பு கொள்ள முனைகிறார். அவர் யாரைத் தொடர்பு கொள்வார்?. தான் தொடர்பு கொள்ளும் ஒரு ஈழப் பிரதி நிதியின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே தனது ஈழம் தொடர்பான கருத்தியலை முன்னெடுக்கப் போகிறார். யாரைத் தொடர்பு கொள்வார்?.

இவர்தான் எங்கள் பிரதிநிதி இவர்களுடன் பேசி முடிவெடுங்கள் என்று ஈழமக்கள் அனைவரும் அடையாளம் காட்டும் ஒரு கட்டமைப்பு எது ? எதை நாம் கட்டமைத்து வைத்திருக்கிறோம்? நம்மிடம் அப்படியான ஒரு கட்டமைப்பு அடிப்படையில் இருக்கிறதா ?

---




*கறுப்பு யூலை (Black July, ஆடிக்கலவரம்) என்பது ஜூலை 23, 1983 தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள அரசுடன் சிங்கள இனவாதிகளும் சேர்ந்து இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், மக்களை துரத்தியும் சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், பல ஆயிரம் பேர் வரை படுகொலை செய்ததுமான ஓர் கறைபடிந்த வரலாறாகும்.*




உலகில் உள்ள பெரும்பாண்மையான அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்களை இடது சாரிகள், வலது சாரிகள் அல்லது நடுநிலையாளர்கள் என்ற பெரும் பிரிவுகளில் உள்ளடக்கிவிடலாம். இந்த இடதுசாரி, வலதுசாரி என்று வகைப்படுத்தும் முறை எப்படி தோன்றியது ?

1700 களின் பிற்பகுதிகளில் பிரெஞ்சு இராச்சியத்தில் உருவான நிதிநெருக்கடி, உணவு பற்றாக்குறை, வறுமை, பொது மக்கள் மீது சுமத்தப்பட்ட அளவுக்கு அதிகமான வரிச்சுமை இவை

எதனையும் கண்டுகொள்ளாத அரசன் என பிரெஞ்சு முடியாட்ச்சியின் மீது மக்களுக்கு கடும் அவநம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அன்றைய பிரெஞ்சு சமுதாயம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. முதல்

பிரிவினராக திருச்சபையை சார்ந்த குருமார்களும் அதன் நிர்வாகிகளும், இரண்டாம் பிரிவினராக பிரபுக்களும் மூன்றாம் பிரிவினராக பொதுமக்களும் இருந்தனர்.

1789 ஆம் ஆண்டு பிரெஞ்சு பொதுமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. பல போராட்டங்களுக்கு பிறகு அது வரையிலும் இல்லாத நடைமுறையாக பொதுமக்களுக்கு இரண்டு பங்கு இடங்களை கிடைத்தது. அதன்படி மன்றத்தில் நான்கில் இரண்டு பங்கு இடங்கள் பொது மக்களுக்கும், ஒரு பங்கு திருச்சபையாருக்கும், ஒரு பங்கு பிரபுக்களுக்கும் ஒதுக்கப்பட்டது. தேர்தலில் 1201 பேர் பொது மன்றத்திற்கு தெரிவானார்கள் அதில் 201 பேர் பிரபுக்கள், 300 பேர் பாதிரியார்கள், எஞ்சிய 610 பேர் மூன்றாம் பிரிவினராகிய பொதுமக்கள்.

பொதுமக்களுக்கும் மற்ற இரண்டு பிரிவுகளுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டால் மூன்றாம் பிரிவினரான மக்களின் பிரதிநிதிகள் பிரிந்து சென்று தனியே மன்றத்தை கூட்டினர். அது தேசிய மன்றம் என்று அழைக்கப்பட்டது. அனைத்து முடிவுகளையும் தாங்களே எடுக்கபோவதாகவும் அரசின் நிர்வாகம் தங்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் எனவும் அவர்கள் அறிவித்தனர். மக்களிடம் அவர்களுக்கு முழு ஆதரவு கிடைத்தது. சில பிரபுக்களும், திருச்சபையாரும் மன்றத்துக்கு அங்கீகாரம் அளிக்க முன்வந்தனர். முதலில் மன்றத்தை முடக்க எத்தனித்த மன்னர் லூயி பிறகு வேறு வழியின்றி தேசிய மன்றத்தை ஏற்றுக்கொண்டார். பிரெஞ்சு இராச்சியம் முழுவதும் பதற்றமான சூழ்நிலையும், சில இடங்களில் கலவரங்களும் நிகழ்ந்தது.

இந்த மன்றத்தின் நோக்கம் பிரான்சுக்கான அரசியல் அமைப்பை உருவாக்கி பிரித்தானிய இராச்சியத்தை போல பிரான்சையும் அரசியல் அமைப்புக்கு உட்பட்ட முடியாட்ச்சியாக மாற்ற வேண்டும் என்பதாக இருந்தது.. முதல் நடவடிக்கையாக இம்மன்றம் நிலவுடைமையை ஒழித்து, திருச்சபயாருக்கும் பிரபுக்களுக்கும் இருந்த வரிவசூலிக்கும் அதிகாரங்களை பறித்துக்கொண்டது. படிப்படியாக அவர்கள் சொத்துக்கள் தேசிய மயமானது. ஒரு கட்டத்தில் அளவுக்கு அதிகமாக திருச்சபையின் கருவூலத்தில் இருந்த பொருட்க்கள் ஏலத்திற்கு வந்தன.

கடும் அதிருப்தி அடைந்த திருச்சபையாரும், பிரபுக்களும் குழுக்களாக பிரிய ஆரம்பித்தனர். தங்களுக்கு கட்டற்ற அதிகாரத்தை வழங்கிய பழைய மன்னராட்ச்சி திரும்ப வர வேண்டும் என்று குரல் கொடுக்க தொடங்கினர். இவர்கள் அவையில் தேசிய மன்றத்தின் முன்னவர் இருக்கைக்கு வலது பக்கத்தில்

அமர்ந்தனர். இதனை எதிர்த்த புரட்ச்சியாளர்கள் இடது பக்கத்தில் அமர்ந்தனர். அது முதல் பழமைவாதிகள் வலது சாரிகள் எனவும் புரட்ச்சியாளர்கள் இடது சாரிகள் எனவும் பிரான்சில் அறியப்பட்டனர்.

1789 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சி வேண்டும் என்று உருவான பிரெஞ்சு புரட்சி . பின்பு பிரான்சை குடியரசாக மாற்றி இறுதியாக 1799 ஆம் ஆண்டு நெப்போலியன் எனும் சர்வாதிகாரியிடம் கையளித்ததுடன் நிறைவுக்கு வந்தது.

குடியரசாக மாற்ற வேண்டும் என்ற புரட்சியின் அடிப்படை நோக்கம் தோல்வியுற்றாலும், அது அறிமுகப்படுத்திய இடது - வலது எனும் சார்பு அரசியல் முறை ஐரோப்பிய அரசியலிலும் பிறகு உலக அரசியலிலும் நிலைத்துவிட்டது.

பிரெஞ்சு புரட்சியின் போது திருச்சபையாரும், பிரபுக்களும், மன்னரின் விசுவாசிகளும் வலது சாரிகளாக கருதப்பட்டனர். மாற்றம் வேண்டிய மற்ற அனைவரும் இடதுசாரிகளாக அறியப்பட்டனர், இதில் பிரபு குடும்பங்களை சாராத முதலாளிகளும், பெரும் வாணிபர்களும் அடக்கம்.

தொழில் புரட்சியால் மாறி வந்த முதலாளித்துவ பொருளாதார சூழலில் மன்னர்களும், பிரபுக்களும் மறைந்து அந்த இடங்களை பெரு முதலாளிகள் ஆக்கிரமித்துக்கொண்டனர். இடது சாரிகளாக மக்கள் உரிமைகளுக்கு போராடுபவர்கள் நிலைபெற்றனர்.

இன்றைய உலக அரசியலில் இடதுசாரிகளாக கருதப்படுபவர்கள் (கருதப்படும் தத்துவப் பிரிவுகள்)

சமூகவுடைமையாளர்கள் (communists), பொதுவுடைமையாளர்கள் (socialists), பொதுவுடைமை தேசியவாதம் (Socialist Nationalism / Left Wing Nationalism), சமூக தாராண்மையியவாதிகள் (social liberals), சமூக சனநாயகவாதிகள் (social democrats), சனநாயக சோஷலிஸ்டுகள்ஃபொதுவுடைமைவாதிகள் (democratic socialists), பசுமைஃசூழலியல் அமைப்புகள் (greens), மதச்சார்பற்றவர்கள் (secularistள), அரசின்மைவாதிகள் (anarchists), போர் எதிர்ப்பு இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் இவற்றை ஒத்த சித்தாந்தத்தை பின்பற்றும் ஏனைய அமைப்புகள்.

வலதுசாரிகளாக கருதப்படுபவர்கள் (கருதப்படும் தத்துவப் பிரிவுகள்)

முதலாளித்துவம் (Capitalism), பழமைவாதிகள் (Conservatives), பிற்போக்குவாதிகள் (Reactionaries), முடியாட்ச்சிக்கு ஆதரவானவர்கள் (Monarchists), பொருளியல் தாராண்மையியவாதிகள் (Economic libertarians), சமூக ஆதிக்கவாதிகள் (Social authoritarians), சமயச்சார்பாட்சியாளர்கள் (Theocrats) - இறைவனோ, இறைவனின் கட்டளைக்கு உட்பட்டு அவரது தூதுவரோ ஆட்சி செய்கிறார்கள் என்ற கோட்பாடு. தேசியவாதிகள் (Nationalists) - தங்களை வெறும் தேசியவாதிகளாக அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் மேற்க்குலகில் பெரும்பாலும் முதலாளித்துவ பழமைவாத ஆதரவாளர்களாகவே உள்ளனர். பாசிசம் (Facism), தேசியவாத பொதுவுடைமை (National Socialism) - இட்லர் அவர்கள் பின்பற்றிய அரசியல் முறை.

இடது - வலது அரசியலில் எந்த பக்கமும் சாயாமல் நடுநிலைவாதத்தையே (Centrism) தங்கள் கொள்கையாக கொண்ட அமைப்புகளும் உண்டு.

மேலும் இந்த இடது-வலது அரசியலுக்குள் உட்படாது வெவ்வேறு மதம் சார்ந்த அல்லது பண்பாடு சார்ந்த வரலாற்று போதனைகளை அல்லது பழக்கங்களை உள்வாங்கி, ஒன்றிணைத்து தனியே ஒரு அரசியல் கொள்கையை உருவாக்கம் செய்யும் அரசியல் முறை கலப்பு அரசியல் (Syncretic Politics / Syncretism)




எனப்படுகிறது

எசுப்பானிய மற்றும் போர்த்துகீசிய பண்பாடுகளையும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் மத போதகங்களையும் உள்வாங்கிக்கொண்டு பொதுவுடைமை, முதலாளித்துவம் , மனித உரிமைகள் என அனைத்தையும் முடக்கி யூத மற்றும் விடுதலை கட்டுநர்கள் (Free Masons) எதிர்ப்பு போன்ற கொள்கைகளுடன் ஆட்சி புரிந்த எசுப்பானிய சர்வாதிகாரி பிரான்சிஸ்கோ பிராங்கோவின் Fala ngism மற்றும் Francoism போன்ற அரசியல் கொள்கைகள் கலப்பு அரசியலுக்கு சிறந்த உதாரணம்.

இப்பதிவு இடது-வலது அரசியல் பற்றிய அடிப்படை தகவல் மட்டுமே. மாந்தர்கள் கூடி வாழ தொடங்கியவுடன் அவர்களுக்கு ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் வாழ்க்கை முறையை நெறிபடுத்த முற்பட்டபோது உருவான அரசியல், காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றார் போல் புதிய தத்துவங்களை உள்வாங்கிக்கொண்டு புதிய புதிய சித்தாந்தங்களாக, அரசியல் முறைகளாக தோற்றம் கொள்கிறது. சமூகமாக மனிதர்கள் கூடி வாழும் காலம் வரை, அவர்களுக்கான அரசியலும் பரிணாமம் பெற்று தழைத்தோங்கும்.

இரண்டாம் உலகப் போரில் மே 10, 1940ல் நாசி ஜெர்மனியின் படைகள் பிரான்சு மீது படையெடுத்தன. பிரான்சு சண்டை என்றழைக்கப்பட்ட இப்படையெடுப்பில் அவை மின்னலடித் தாக்குதல் என்ற புதிய தாக்குதல் உத்தியைப் பயன்படுத்தி நேச நாட்டுப் படைகளை எளிதில் முறியடித்தன. ஜூன் 22ம் தேதி பிரான்சு சரணடைந்தது. படத்தில் இச்சரணடைவை ஏற்க பாரிசுக்கு வந்த இட்லர், தனது தளவாடத்துறை அமைச்சர் ஆல்பர்ட் இசுப்பியருடன் (இடது) நிற்கிறார்.






யாரப்பா அவள்? என்ன இழவுக்கு சந்திச்சாளோ? இப்ப எவ்வளவு நேரமாபாத்துக்கொண்டு நிக்குறன். காலை எட்டு மணிக்கு ராந்தேவு (சந்திப்பு) தந்தவங்கள் பத்து மணியாகியும் ஒருத்தன் சரி வந்து கூப்பிட்டானா பார்.
அடிக்குற குளிர் உள்ளங்கால்ல இருந்து உச்சம்தலை மட்டும் ஊசி மாதிரி குத்துது. அவங்கள் மட்டும்
குளிரையும் நேரத்தையும்போக்க மணிக்கு மூன்றுதரம் கபேயும், சிகரட்டும் இழுத்துட்டு வாரங்கள். என்ன.எப்பதான் கூப்பிடப்போறாங்களோ. தரித்திரம் பிடிப்பான்கள். என்று என்மனதுக்குள் என் கோபத்தையும் அதிருப்தியையும் எரித்துக்கொண்டு. பக்கம் பக்கமாக உங்களுக்கு அலுப்படிக்காமல் நான் நிக்கும் இந். நிலைக்கான சம்பவத்தை உங்களுக்கு சொல்லப்போகின்றேன்

அடுத்தவர்கள் கதை கேட்பதிலும் அடுத்தவர் பற்றிய விடுப்பு கதைப்பதிலும் இருந்து விலகி நிக்க நீங்கள் ஒன்றும் முற்போக்குச்சிந்தனையும் சமூக மேம்பாட்டு பரட்சியாளரும் அல்லவே.சரி நீங்க கடுப்பாக முதல் நான் கதைக்கு வாரன்.

ஒரு வாரம் இருக்கும் ஊரில இருந்து புதுசா என்ர வீட்டில வந்திருக்குற.
"என்ரவீடென்றா சொந்தமில்லை வாடகைக்கு இருக்குற வீடு. பழக்கதோசம் பேச்சுவழக்கு அப்படியே வந்துட்டு. மனுசீட தங்கச்சிக்கு வசந்திக்கு லாப்போஸ் எக்கவுண்ட் (வங்கிக்கணக்கு)ஒன்று திறக்க மொழிபெயர்ப்பாளரா போயிருந்தன்.அதுக்காக நீங்க நினைக்க வேண்டாம் இவர் பிரஞ்சுல புலியோ என்று.

மொழி எனக்கும் அப்படி இப்படிதான் இந்த நாட்டில இருக்கவேணும். இந்த நாட்டுமக்களோட வாழவேணும்.இந்த நாட்டில நாங்கள் ஏதும் தொழில் செய்து முன்னேறவேணும். என்டா இந்த நாட்டு மொழி அவசியம் தானே அதலா என் அலுவல்களை விளங்கி செய்வதற்கு கொஞ்சம் படிச்சன். அதுக்காக உங்கள கட்டாயப்படுத்த இல்ல.மொழியபடிக்குறதும் படிக்காம விர்றதும் உங்கட விருப்பம்.

நானும் வசந்தியும் முகாமையாளர சந்திக்க
வரிசையில் நிக்கேக்க அந்த பிள்ளையும் வசந்திக்கு பின்னுக்கு வந்து நின்றுது. அதுகும் ஊரிலிருந்து புதுசாவந்த பிள்ளையாக்கும். குளிருக்கு போட்டிருந்த உடுப்பும் அவாண்ட மேக்கப்போடாத முகமும் காட்டிக்கொடுத்துட்டு. அந்த பிள்ள என்னையும் வசந்தியையும் பாத்து அறிமுகத்துக்காக ஒரு மெல்லிய சிரிப்ப சிரிச்சு போட்டு பேசாம இருந்துது. கொஞ்ச நேரம் கழித்து வசந்தீட்ட "நீங்க தமிழோ" என்று கேட்க,
வசந்தி கொஞ்சம் வாயாடி ஊரில ஒரு பழ மொழி சொல்லு வீனம் "பீக்கு முந்தின...மாதிரி" "ஓம் ஓம் தமிழ்தான் லாப்போஸ்ட் ஒன்று திறக்கவேணும் அதுதான் வந்தனான். நான் பிரஞ்சு சும்மா கதைப்பன் எக்கவுண்ட் திறக்குறதென்றால் கூட விசயங்கள் கேப்பாங்கள் அது தான் அத்தான கூட்டிக்கொண்டு வந்தனான். அவர் வந்து ஆறு வருசம் நசினாலட்டியும் எடுத்துட்டார் இரண்டு பிள்ளைகள் "என்று ஒரே முழக்கில் முழக்கிவிட்டாள்.

நானோ மனதுக்க என்ன கறுமத்துக்கடா இவள் அறி-முக மில்லாத ஆளுட்ட இப்படி வெள்ளந்தியா பேசுராளே என்று எண்ணிக்கொள்ள அந்த பிள்ளையும் வசந்தீட்ட "எனக்கு பாச தெரியாது உங்கட அத்தான ஒருக்கா உதவி செய்யச்சொல்லுங்கோ" என்று கேட்கவும் வசந்தியும் "கட்டாயம் அத்தான் உதவி செய்வார் ஏன் உங்களுக்கு உதவிக்கு ஆக்கள்
ஒருதரும் இங்க இல்லையே என்று கேட்டாள் அவளும் "நான் கலியாணம் பேசித்தான் ஏயன்சி மூலம் இங்க

வந்தனான் அவர் குப்பியர் வேலைக்கு
போறார் வீட்டில நிக்குறதே இல்ல நிக்குற ஒருநாளும் ஒரே நித்திரதான்"என்று தன் புலம்பலோடு மனம் வருந்தினாள் .
அதற்கிடையில் வசந்திக்கான முறையும் வர நாங்கள் முகாமையாளரின் அறைக்கு போனோம் எங்கள் அலுவலை முடித்து விட்டு வர வசந்தியிடம் அவள் உதவி கேட்டது நினைவு வந்தது. எங்கள் பின்னுக்கே அவளும் நின்றபடியால் நான் அவளுக்கும் மொழி பெயர்பு செய்தேன் அப்போதுதான் எனக்கு தெரிந்தது அவள் எனது வீட்டிற்கு.மன்னிக்கவும் நான் வாடகைக்கு இருக்கும் வீட்டிற்கு அருகில் தான் இருக்கிறாள் என்று .
நான் இருக்குற வீட்டுக்கு பக்கத்தில தான் உங்கட வீடும் இருக்கு வாங்கோ காரில் கொண்டு போய் இறக்கி விர்றன் என்று காரில் ஏத்தவும் வசந்தியின் வாய் பேச்சுக்கொடுக்க தொடங்கீட்டு.
அவளிண்ட பேரச்சொல்ல மறந்துட்டன். "புஸ்பா" அவளும் பேச்சில் குறைந்தவள் அல்ல அவள் பேச்சில் வரும் வார்த்தைகள் எல்லாம் வலி.கவலையும் நிறைந்ததாகவே இருந்தது. என் மனதில் புஸ்பா மீது அனுதாபம் எழுந்து அவளுக்கு ஏதும் உதவ வேண்டும்பேல் இருந்தது. காரை விட்டுஇறங்குவதற்குள் வசந்தியோடு மிக நெருக்கமாவிட்டாள் போகும்போது வாசந்தியிடம் மொபைல் இலக்கத்தையும் வாங்கிக்கொண்டு போய்விட்டாள்.
இப்படியே காலம் பெண்டுகளுக்குரிய பேச்சுக்களோடும் சிறு சிறு கொடுக்கல் வாங்கலோடும் நீண்டது.
வழமைபோல் இரவு பன்னிரண்டு மணிக்கு வேலையால வந்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்போது திடீர் எண்டு என்ர போனுக்குபுஸ்பாவிடம் இருந்து உயிர் போகும் பதட்டத்துடன் அழைப்பு "அண்ணா! ஒருக்கா கதவதிறவுங்கோ அவசரம் என்றாள். நள் இரவை தாண்டிய பொழுது ஒரு பெண்ணின் அவலக்குரல் என்னை இழகவைத்தது நான் கதவை திறந்து விட்டுவிட்டு மனைவியை குழந்தைகளின் தூக்கம் குலையா வண்ணம் எழுப்பினேன்.
உங்களுக்கு தெரியும்தானே குழந்தைகளின் நித்திரை இரவில்
குழம்பினால் என்ன செய்வார்கள் என்று.அதுகும் என்குழந்தைகள் பிடிவாதம் கூட ஒரே கூச்சலில் ஊரை எழுப்பி விடுவார்கள்
வந்தவள் "அண்ணா! அந்தாள் குடிச்சுபோட்டு வந்து என்ன அடிக்குறான் பத்தாததுக்கு குளிருக்க என்ன வெளியால துரத்தி விட்டுட்டான் எனக்கு எங்க போறதென்று தெரிய இல்ல. இங்க உதவிக்கு யாரும் இல்ல.
அது
தான் உங்களுட்ட ஓடிவந்தனான். இரவைக்கு இந்த கதிரையில ஒரமாய் இருந்துட்டு விடிய பொலிசுக்கு போரன்"என்று கண்கள் ஆறாய் சொரிய குளிரின் நடுக்கத்தில் ஓவெனக் கத்திக்குழறினாள்.

அவள் அளுகையை என் மனைவி அரவனைத்து போக்கி ஆறுதலாய்"விடிய பொலிசுக்கு போவம் இப்ப படுங்க"என்று கோலில் இருந்த செற்றியில் படுக்கவைத்தாள்.
காலை எட்டு மணியிருக்கும் தூக்கக் கலக்கத்தை முறித்து பார்தால் படுத்திருந்த புஸ்பாவை காணவில்லை மனைவியை விசாரித்தால் அவளுக்கும் தெரியவில்லை.நான் பதட்டத்தில் அவளுக்கு கோல் எடுத்தேன். அப்போது"செல்லுங்கண்ணா நான் பொலிசுக்கு போகவேனும் என்டு விடிய 5மணிக்கே இறங்கீட்டன் இருந்தும் மனம் கேக்க இல்ல வீட்ட வந்திட்டன். இந்தாங்கோ இவர் நிக்குறார் கதையுங்கோ"என்று அவள் புருசனிடம் போனைக்கொடுத்தாள் எனக்கு இருந்த கோவத்தில அவனுட்ட "யோ நீர் எல்லாம் மனுசனா ஓய் இரவுல பொம்புளைய அடிச்சு வீட்ட விட்டு துறத்துறீர்"என்று கிழிக்க தொடங்கவே அவன் தன் மெல்லிய குரலில் "அண்ணா அவவ வீட்ட தங்க வச்சதுக்கு நன்றி" என்றான் எனக்கு ஒரே ஆச்சரியம் என்னடா இவன் இப்படிக்கதைக்கிறானே என்று நானும் சொல்லுங்க என்ன பிரச்சன வீட்டில என்று கேட்கவே "இல்லை அண்ணா புஸ்பா என்னுடைய சொந்த மச்சால் தான் நான் அவவ இரண்டாம் தாரமாதான் கட்டி இருக்குறன் அவட புருசன் ஆமி சுட்டு செத்திட்டார் ஏயன்சி மூலம் கூப்பிட்டு இருக்குறன். இன்னும் எழுத்து எழுத இல்ல ஒப்ரால கேஸ் இருக்கு என்ன வோ ஏதோ தெரிய இல்ல இப்படி.தமிழாக்கள் யாரக்கண்டாலும் தன்ன ஒரு ஏதிலி மாதிரி பாவனை செய்து அவர்களுட்ட என்ன கூடாம சொல்லி அனுதாபம் தேற்றது. உண்மையில ஒரு கணவணுக்குரிய எதிர் பார்புக்களை தான் நான் அவ-ளிடம் எதிர்பாக்கிறன் அது தவறா?" என்று என்னிடம் தன் நியாயத்தின் மீது கேள்வியை தொடுத்தான் உண்மையில் அவன் கேட்பதும்
நியாயமாகவே பட்டது நான் புஸ்பாவிடம் போனைக்குடுக்க சொன்னேன்.புஸ்பா "சொல்லுங்க அண்ணா"என்றாள் உன்னுலதான் பிழை போல

கவணமா நடந்து கொள் என்று போனை கட் பண்ணினேன்.
மேற்படி சம்பவம் நடந்து ஒரு வாரமிருக்கும்.எனக்கு பொலிசில் இருந்து அழைப்பு "உனக்கு புஸ்பாவைத்தெரியுமா? நாளை எட்டுமணிக்கு பொலிசுக்கு வா.என்று
நான் சொன்ன நேரத்துக்கு வந்திட்டன் அவங்கள் இன்னும் கூப்பிட இல்ல.
நான் நினைக்குறன் புஸ்பாவுக்கு முதல் புருசன இழந்தது மனத பாதித்து இருக்கும் எண்டு. அப்படிதான் புஸ்பாட புருசனும் சொன்னவன். தமிழன் மீது மேற்கொள்ள பட்ட மிலேச்சத்தன மான இன அழிப்பில் இப்படி எத்தன பேர்.? சிலவேள புஸ்பாவுக்கு எதும் நடந்திருக்குமோ இல்ல புருசன்தான் எதும் செய்துபோட்டானோ தெரிய இல்ல நானும் வேலைய விட்டுட்டு வந்தனான்.
ஒரு பொலிஸ்காரியின் அரை உச்சரிப்பில் "வதனன் வதனன்" என்ற அழைப்பு சரி நான் உள்ள போப்போரன் என்ன பிரச்சனையோ உதவி செய்யப்போய் உவத்தரமா வந்திருக்கு. விசாரன என்னத்தப்பற்றியோ?

---

# உயிர்மூச்சு

பார்வதி சுமந்தது
கருவல்ல....
எங்கள்
பார்த்தீபன் சுமந்ததும்
பசியல்ல..
வீழ்வதும் எழுவதும்
வெறும் பேச்சல்ல..
வீரர்கள்
வாழ்வதும் சாவதும்
வெறும் மூச்சல்ல..

மேகங்கள் சூழ்வது
மழைக்காக..
இடி மின்னல்கள்
வருவதும்
அதற்காக..
எங்கள் கரிகாலன்
பிறந்ததும் எதற்காக
கடற்கரை மண் தன்னில்
தவழ்ந்ததும் எதற்காக..
உருவான வரலாறு
உருமாறிப்போகாது..
ஒருநாளும் திசை
மாறிப்போகாது..
எது வரினும்
எவர் வரினும்
எமன் வரினும்
எங்கள் விடுதலையை
விலைபேச முடியாது..

கூட்டமைப்பு கூடிக்
குலாவட்டும்..
கூத்தாடட்டும்..
எம்மை கொன்றவனை
வரவேற்று
விருந்தாக்கட்டும்..
வீசும் காற்றை
தமதாக்கட்டும்..
ஆனாலும்
முடியாது..முடியாது..
ஆராலும்
முடியாது...

எங்கள் விடுதலைப்
பெருவெளியை
தமிழீழ கருவறையை
துதிபாடிப்
பெறமுடியாது...
தெருவில் நின்று
கவிபாடிப்
பெறமுடியாது..

ஒரே வழி
ஒற்றை வழி
எங்கள் தாயினும்
மேலான
தலைவன்
தந்த வழி...
அதுதான்
வீரர் வழி...
விடுதலையை
பெற்றெடுக்கும்
இறுதி வழி..
ஈன்றெடுக்கும்
தமிழீழம்
இந்த வழி
இந்த வழி
இந்த வழி......

# பாலியல் தெளிவும் சமூக மேம்பாடும்



சார்ள்ஸ் ஜெரட்ணம் போமன்

"நானாக இத்தலைப்பைத் தேர்ந்தெடுக்கவில்லை எழுதுவதற்கு. காலம்தான் பத்திரிகையாசிரியரைத் தூண்டியது இத்தலைப்பில் ஒரு கட்டுரையைப் பிரசுரிக்க என்பதில் உங்களொருவருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்கப்போவதில்லை. நானாக இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டேன் இது இந்தச் சந்தர்ப்பமாக இருப்பதனால். தவிர, இத்தலைப்பில் இருக்கும் சொற்களான "பாலியல்", "தெளிவு", "சமூக மேம்பாடு" என்பவை எமது சமூகத்தில் மிகவும் உணர்வுகள் பொதிக்கப்பட்ட [visceral]பதங்களாக இருக்கின்றன என்பதாலும் நான் இத்தலைப்பில் எழுதுவதற்குத் தயங்கியிருப்பேன்.

அதனாலென்ன, ஒரு விடயத்தின் சிக்கலான தன்மைதானே அதைத் தொட்டு ஆராய்வதற்குத் தூண்டுகிறது. எனவே, ஆரம்பிக்குமுன்பு இதுபற்றிய எனது நிலைப்பாட்டையும் அதன் காரணத்தையும் விளக்க முயற்சிப்பது அவசியமென்று நம்புகிறேன்.

கடந்த கால் நூற்றாண்டாக சுவீடனில் வாழ்ந்துவரும் நான் பதினைந்து வருடங்களுக்கு மேலாக உயர்தர வகுப்பில் இந்த நாட்டுக் கல்விக்கூடத்தில் படிப்பித்து வருவதால் எனது கண்ணோட்டத்தின் முக்கியமான அடையாளம் இத்தலைப்பின் உணர்ச்சி பொதிக்கப்பட்ட பாகங்களை உதறிவிட்டுக் கவனிப்பதாகவே இருக்கும். அதேசமயம் எமக்கு பெயரளவில் அறிமுகமான ஆனால் உள்ளீட்டில் மிகக்குறையவே அறிமுகமான ஐ.நா-வின் மனித உரிமைகள் சாசனத்தின் கண்ணோட்டத்தைக் கொண்டதாகவும் இருக்கும்.

பாலியல் என்ற சொல்லுக்குள் ஏகப்பட்ட உணர்ச்சிகளை அடைத்திருப்பவை, சமயங்கள், சமூகங்கள், மனோதத்துவம், தேசியச் சட்டம்-ஒழுங்குகள், சமூக வழிமுறைகள் என்று ஒரு நீண்ட பட்டியலே போடலாம். அதன் காரணங்கள் வெவ்வேறு. இங்கே அதன் தெளிவு சமூக மேம்பாட்டுடன் எப்படிக் கலந்திருக்கிறது என்பதையே கவனிக்கப்போகிறேன். எனவே சமூக மேம்பாடு என்று எதைக் குறிப்பிடலாம் என்று யோசிக்கலாம்.

சமூக மேம்பாடு என்று இங்கே சொல்லும்போது நாம் வாழும் சமூகத்தில் பாலியல் பற்றி தெளிவு ஏற்படுவதால் சிக்கல்களும், குற்றங்களும் குறைவதால் ஏற்படக்கூடிய நன்மைகளையே குறிக்கிறது. அடுத்ததாக சில மாதங்களுக்கு முன்பு ஈழத்தில் தமிழ்ச் சமூகத்தில் நடைபெற்ற குறிப்பிட்ட ஒரு கற்பழிப்பும், கொலையுமே இப்பிரச்சினையை சர்வதேசத்திலுள்ள தமிழ்ச் சமூகத்தின் பிரத்தியேக கவனத்துக்கும் கொண்டுவந்தன. அதாவது, விதம்விதமான பாலியல் குற்றங்கள் எங்கள் சமூகத்தில் எனக்குத் தெரிந்த காலத்திலிருந்து நடந்துவந்தாலும்கூட ஊடகங்களும், சமூகவலைத் தளங்களும் குறிப்பிட்ட இந்த இளம் சிறுமியின் பாலியல் பலாத்கார கொலையை ஈழத்தமிழர்கள் மத்தியில் இப்படிப்பட்ட எதுவுமே என்றுமே இருந்திராதது போன்ற

படத்தை உருவாக்கின.

ஊடகத் துறையின் மனோபாவம், மனோதத்துவம் போன்ற பல கோட்பாடுகளைப் பாவித்தும் குறிப்பிட்ட இப்பெண்மீது பிரயோகிக்கப்பட்ட இப்பலாத்காரம் ஏன் இத்தனை பெரியதாகியது என்பதை
ஆராயலாம். அத்துடன் ஈழத்தமிழர்களின் போர் முடிவுக்கு வந்தபின் சமூகத்தின் மனோநிலை, அரசியல் காலநிலை எப்படியாக இருக்கிறது என்பதையும் அது இப்பிரச்சினையை ஏன் இப்படியாக அணுகுகிறது என்றும் கூடக் கவனிக்கலாம். ஆனால், நான் இக்கட்டுரையை மேலும் சிக்கலாக்காமல் இருக்க அவற்றைத் தவிர்க்க முயல்கிறேன்.

பாலியல் தெளிவு என்பது ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கு அவசியம் என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் பாலியல் தெளிவு என்பது இரண்டு வகையில் பிரிக்கப்பட்டு அவ்விரண்டும் கைகோர்த்துச் செயற்படுவது அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை என்பதையே என் கருத்தாக இக்கட்டுரையில் காட்ட முயல்கிறேன்.

சமூக மேம்பாட்டுக்காக முதலாவதாக பாலியல் உறவுகளில் தெளிவை ஏற்படுத்துதல் அவசியம். அவ்விடயத்தில் வயது வந்தவர்களுக்கும் கல்விக்கும் சம அளவான பங்கு உண்டு. இரண்டாவதாக, ஏற்படுத்தப்படும் தெளிவின் வரைமுறைகளைத் தாண்டுகிறவர்களைத் தண்டிப்பதற்கான தெளிவான சட்டங்களையும், தண்டனைகளையும் உருவாக்கி அவற்றை அடிக்கடி மீள்பரிசீலனை செய்வதில் நாட்டின் குற்றவியல் துறைக்குக்குத்தான் முழுவதுமான பொறுப்பு இருக்கவேண்டும். அத்துறை அரசின் கீழ் எவ்வித மத, இன, சமூகப்பிரிவுகளையும் வெவ்வேறு விதமாகக் கவனிக்காமல் இயங்கவேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றில் முதலாவது என்று நான் குறிப்பிட்டவற்றில் வயது வந்தவர்களின் பொறுப்பைத் தவிரக் கல்வித்துறையின் பங்களிப்பைக் குறிப்பிட்டேன். அங்கேயும் பாலியல் பற்றிய தெளிவுக்கு ஆணிவேராக ஒரே கோட்பாடு கடைப்பிடிக்கப்படவேண்டும். அதாவது இங்கேயும் எவ்வித மத, இன, சமூகப்பிரிவுகளையும் வித்தியாசமான முறையில் கையாள இடம்கொடுக்கக்கூடாது.

இந்த நிலையை எமது சமூகம் ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் இல்லை என்பதை வாசிக்கும்போதே எவரும் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். காரணமாக மத, இன, சமூகப்பிரிவுகள் ஒவ்வொன்றுத் தத்தம் பகுதியினருக்கு தத்தமது விதமான பாலியல் சம்பந்தப்பட்ட "தெளிவு" புகுத்தப்படவேண்டும் என்பதற்காக முடிந்தவரை போராடுவார்கள் என்பது ஒரு பக்கம். அதேசமயம் எமது சமூகத்தினரிடம் இருக்கும் "குடும்பம்" என்ற அமைப்பின் உள்ளீடும் மேற்கண்ட பிரச்சினைக்குக் காரணமாக அமைகிறது.

ஈழத்தமிழர்கள் என்று "எமது" சமூகத்தை வரையறுத்துக் கவனித்தாலும் அதற்குள் இருக்கும் இந்து, முஸ்லீம் மதத்தவர்கள் முக்கியமான ஒரே விதமான கல்வி முறையையோ, சட்டங்களையோ, தண்டனைகளையோ ஏற்றுக்கொள்ள மறுத்துவருவது அதிகரித்துக்கொண்டிருக்கிறதே தவிர குறையவில்லை. முக்கியமாகக் கருதப்படும் வேறுபாடுகள் சமூகத்தில் ஆண் - பெண் வேறுபாடுகள் பற்றி விடயங்களிலேயே நிலைத்திருப்பதையும் மறைக்கமுடியாது.

குடும்பம் என்று குறிப்பிடப்படுவது எமது சமூகத்தினரிடையே ஆண் - பெண்கள் ஒவ்வொருவருடைய பாத்திரங்கள், கடமைகள் போன்றவற்றை சீமெந்து போட்டு இறுக்கி வைத்திருக்கிறது. தொடரும் வம்சங்களிலும் ஆண் - பெண் பாத்திரங்கள் எப்படியாக உருவாக்கப்படவேண்டும் என்பதை நடத்தைகளாலும், வளர்ப்பாலும் பராமரிப்பதைக் குடும்பம் என்ற சமூக இயந்திரம் தெளிவாகச் செய்து வருகிறது.

மேற்கண்ட நிலையில் பாலியல் தெளிவு என்னவென்பதை ஒவ்வொரு பக்கத்திலும் சமூக மேம்பாடு என்ற கோட்பாட்டுக்கு எதிர்மறையாகவே சமூக அங்கங்கள் எல்லாம் பின்னிக்கொண்டிருக்கின்றன என்பதைக் கவனிக்கலாம்.

என்னைப் பொறுத்தவரை மட்டுமல்ல, சர்வதேச நிலைமைகளையும் சரித்திரத்தையும் கவனித்தாலும்கூட குற்றங்கள் இல்லாத சமூகங்கள் இருந்ததும் இல்லை, இருக்கவும் இல்லை இல்லாமல் போகவும் போவதில்லை. அவற்றினுள் பாலியல் தெளிவு இல்லாமல் உண்டாகும் குற்றங்களும் அடங்கும். எனவே சமூக மேம்பாடு என்று நாங்கள் பாலியல் தெளிவை அணுகும்போது குற்றமில்லாத சமூகத்தை உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்தைக்

கொண்டிருக்க முடியாது. ஆனால், குற்றங்களின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம். அதன் அணுகுமுறையில் தண்டனைகள் என்பவை, வெறுப்பில் உண்டாக்கப்படாமல் தவறிழைத்த மனிதன், சமூகம், அவளைப் புரிந்துகொள்ள முயல்வதாக, திரும்பவும் சமூகத்தில் வரவேற்க விரும்புவதாக உணரக்கூடியதாக அமையவேண்டும் என்பது ஒன்று.

அதே சமயம் குற்றமிழைக்கப்பட்டவர் தன் குரல் கேட்கப்பட்டதை உணரவேண்டும். அதிலும் பாலியல் குற்றங்களுக்கு உள்ளாக்கப்படும் பட்சத்தில் மிக முக்கியமாக அவருக்கான உளவியல் சம்பந்தப்பட்ட ஆதரவுகள் கொடுக்கப்படவேண்டும். அது போலவே குற்றமிழைக்கப்பட்டவரின் குடும்பத்துக்கும் தேவையான உதவிகள் கிடைக்கச் செய்தல் அவசியம்.

ஆனால், பாலியல் தெளிவில்லாமையின் காரணத்தால் எங்கள் சமூகத்தில் அப்படியொரு குற்றம் இழைக்கப்படும்போது முழுக் கவனமும் குற்றவாளியை என்ன செய்யலாம் என்பதில்தான் இருக்கிறது. அதாவது உணர்ச்சிவசப்பட்ட நிலையில் சட்டத்தின் கடமையைச் செய்யவிடாமல் முடிந்தவரை குற்றஞ்சாட்டப்பட்டவரைச் சமூகத்தின் ஒவ்வொரு குடிமகனும் தன்னிஷ்டப்படி தண்டிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறான். இது ஆரோக்கியமான சமூகச் சூழ்நிலையை உண்டாக்கப்போவதில்லை.

எனவேதான் நான் எனது கருத்துக்கள் எப்படியிருக்கும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல ஐ.நா-வின் தனி மனித உரிமைகளை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கொந்தளிக்கும் சமூகப் பிரச்சினையை அணுகலாம் என்கிறேன். எம் சமூகத்தின் பெரும்பான்மையினருக்கு அது என்னவென்ற முழுத் தெளிவு இல்லாவிட்டாலும்கூட ஐ.நா என்று ஒன்று இருக்கிறது, அதன் கோட்பாடுகள் உலக மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கின்றது என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதேசமயம் உலகின் ஆரோக்கியமான சமூகங்கள் பலவற்றிலும் சமீபகாலமாக இக்கோட்பாடுகள் மென்மேலும் ஆழமாக இணைக்கப்பட்டு அதன்மூலம் நன்மை பெறப்படுவதையும் கவனிக்க முடிகிறது. சர்வதேச ரீதியான கணிப்பீடுகளில் சுபீட்சமான, அமைதியான நாடுகள், குற்றங்கள் குறைந்த நாடுகள் என்று கவனித்தால்



அவைகளில் ஐ.நா வின் தனி மனித உரிமைகள் பேணப்படுவதையும் சுட்டிக்காட்டலாம்.

அதன்மூலம் பாலியல் தெளிவு அணுகப்படும்போது வயதுக்கு வந்த ஒவ்வொரு தனி மனிதனின் அசைக்கமுடியாத உரிமையும் சுட்டிக்காட்டப்படுகிறது. வயதுக்கு வராதவர்களின் பாதுகாவலர்களாகப் பெற்றோரின் உரிமைகள் குறிப்பிடப்பட்டு, அவைகளை மீறுபவர்கள் பெற்றோர்களாகவே இருந்தாலும்கூட தண்டிக்கும் அதிகாரம் நீதித்துறையின் கையில் இருக்கிறது.

பாலியல் தெளிவு என்பது இதன்மூலம் ஒரு தனி மனிதருக்கு அவரது உடம்பு உரிமையானது என்பதை முதலில் தெளிவுபடுத்துகிறது. எனது உடம்பு எனக்கு உரிமையானது என்பதை ஒரு மனிதருக்குக் கல்விமூலம் தெளிவுபடுத்தப்படும் அதே சமயம் "இன்னொருவரது உடம்பின்மேல் அவரது அனுமதியின்றி உனக்கு உரிமை இல்லை" என்பதும் புரியவைக்கப்படுகிறது.

இதன் இயல்பான விளைவாக எங்கள் சமூகத்தில் குடும்பத்துக்குள்ளும் இதுவேதான் தெளிவான எல்லை என்பது வகுக்கப்படவேண்டும். இந்த நிலைப்பாட்டில்தான் பாலியல் தெளிவு உருவாக்கப்படல் வேண்டும்.

அதாவது கல்யாணம் என்ற சட்டபூர்வமான ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருவருக்குள்ளும் கூட உடம்புகள் அவரவர் சொந்தமாகக் கணிக்கப்படும். இந்த இருவருக்குள்ளும் கூட

பாலியல் தொடர்பு கொள்ளும்போது “இல்லை” என்று ஒருவர் மறுப்பாராயின் மற்றவர் அதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்பது சட்டத்தினால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு கணிப்பீட்டில் இந்தியா, சிறீலங்கா போன்ற நாடுகளில் தங்கள் கணவர்கள் விரும்பினால் தங்கள் ‘மனைவியின்” உடலைப் பாவிப்பது அக்கணவர்களின் உடமை என்றும் அக்கணவர்கள் தம் மனைவிகளை உடல்ரீதியாகத் தண்டிப்பதற்கு உரிமையுள்ளவர்கள் என்றும் பெரும்பாலான பெண்களே கருதுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதுவேதான் புலம்பெயர்ந்து வாழும் எமது சமூகத்தினரிடையே பெரும்பாலும் நிலவும் கருத்துக்கூட என்பதில் எனக்குக் கிஞ்சித்தும் சந்தேகம் கிடையாது.

பாலியல் தெளிவு சமூக மேம்பாட்டுக்கு உதவவேண்டுமானால் இங்கே மிகப்பெரிய மாறுதல் ஒன்று செய்யப்பட வேண்டும். அது சட்டத்தினால் கொடுக்கப்படும் உணரக்கூடிய தண்டனைமூலம் தெளிவாக்கப்படல் வேண்டும்.

இந்த நிலைமைக்கு ஒரு சமூகம் முன்னேறவேண்டுமானால் அது வெறுமனே ஒரு சட்டத்தாலும் தண்டனையினாலும் நடக்காத காரியம் என்பதைப் புரிந்துகொண்டுதான் நான் மேற்கண்ட விதத்தில் பாலியல் குற்றங்கள் பற்றி அணுகுகிறேன். எமது சமூகங்களில் இன்னும் வழக்கமாக இருக்கும் நிலைமை குடும்பத்தின் ஆண் பொருளாதாரத்துக்குப் பொறுப்பாக இருப்பதும் பெண் வீட்டு வேலைகளுக்கும், குழந்தை வளர்ப்புக்கும் பொறுப்பாக இருப்பதுமாகும்.

பொதுவாகப் பெண்கள் பலரும் சம்பளத்துக்கான வேலைக்குப் போகும் நிலைமை வந்திருக்கும்போதிலும் பெண்கள்மீதுள்ள வீட்டு வேலை ¸ பிள்ளை வளர்ப்புப் பொறுப்புக்கள் மிகச் சிறிய அளவில் குறைந்திருக்கின்றனவே தவிர கருத்தளவில் எதிர்பார்ப்புக் குறையவே இல்லை. இந்த நிலையில் இருக்கும் சமூகத்தில் பெண்கள் தங்கள் கணவன் தங்களைப் பாலியல் உறவுக்குக் கட்டாயப்படுத்தினால் மறுக்கப்போகிறார்களா? அல்லது அப்படியான குற்றம் நடந்தால் அதை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்போகிறார்களா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் அப்படியொரு சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்த பின்னாலும் பொருளாதார ரீதியில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் பெண்ணின் நிலைமையும், சமூக எதிர்பார்ப்பும் அவளை அதைச் செய்ய இடம் கொடுக்காது.

மேற்கண்டது ஒரு உதாரணம்தான். இதேபோன்ற பல சிக்கலான பாலியல் உறவு நிலைமைகளை நாங்கள் சித்தரிக்கலாம் ஆனால், கணவன் மனைவுக்குள் திணிப்பு இருக்கலாம் என்ற நிலைமை ஏற்கப்பட்டிருக்கும் சமூகத்துக்குள் வளரும் அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கப்படும் செய்தி என்ன? என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

தன் பெற்றோர்கள் சொல்வதையல்ல தன் பெற்றோர்களும், சுற்றமும் நடப்பதைப் பார்த்துத் தான் பிள்ளைகள் சமூகம் தமக்குச் சொல்லும் செய்திகளைப் புரிந்துகொள்கிறார்கள். அவர்களுக்கு, முக்கியமாகப் பெண்பிள்ளைகளுக்கு மேற்கண்ட செய்தியில் சொல்லப்படுவது “உன் உடம்புக்கு உரிமை வேறொரு ஆணுக்குக் கொடுக்கப்படும்!” என்பதாகும். அதேபோலவே ஆண் பிள்ளைக்குக் கொடுக்கப்படும் செய்தி “உனக்கு விருப்பமிருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட பெண்ணின் உடலை நீ கலவிக்காகப் பாவிக்கலாம்!” என்பதும்தான்.

கட்டுரையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டபடி இதைப் பல கோணங்களில் அணுகலாம் என்றாலும் நான் ஓரிரு கோணங்களை மட்டுமே தெரிந்தெடுத்து அணுகுகிறேன், அவற்றை எங்கள் சிந்தனைக்கு உட்படுத்தலாம் என்பதற்காக.

பாலியல் தெளிவு என்பதில் இன்னொரு முக்கிய விடயம் எங்கள் சமூகத்தில் ஆண் பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் எப்படியாகப் பிரித்து வைக்கப்படுகிறார்கள் என்பதிலும் இருக்கிறது.

எனக்குச் சுமார் பனிரெண்டு வயதில் எனது நண்பர்களுடன் பேசிகொண்டிருந்தபோது அவர்களில் ஒருவன் “ஐயா என் மூத்தக்காவுக்கு ஏதாவது சொல்வதாக இருந்தால் என் மூலமாக, அல்லது அம்மா மூலமாகத்தான் சொல்வார், ஏனென்றால் அக்கா வயதுக்கு வந்தவா!” என்றான். எனக்கு மிகப்பெரிய ஆச்சரியமானது. சுற்றியிருந்த நண்பர்களிலும் அவர்களை விட மூத்த சகோதரிகள் வீட்டில் இருந்தவர்கள் அதை ஆமோதித்தார்கள். எனக்கோ அதன் அர்த்தம் புரிய ஏகப்பட்ட ஆண்டுகள் எடுத்தன. ஏனெனில் எங்கள் வீட்டில் அப்படியான

பழக்கங்கள் இருக்கவில்லை. அந்த நண்பனின் பெற்றோர் இருவருமே ஆசிரியர் கல்விச்சாலையில் படித்த ஆசிரியர்கள். நீண்ட காலம் அத்தொழிலில் இருப்பவர்கள். அவர்களின் வீட்டிலேயே ஆண்களும் பெண்களும், சொந்தப் பிள்ளைகளான நிலைமையிலும் பிரிக்கப்பட்டே வாழ்ந்தார்கள் என்பது இன்றும் நான் புரிந்துகொள்ள முடியாத அதிசயம். ஆனால், அது பலரது வீட்டிலும் வழமை என்று பிற்காலத்தில் தெரிந்துகொண்டேன்.

எமது சமூகத்தில் ஆண்களும் பெண்களும் நண்பர்களாகவே பழகுவது அரிது. அப்படியான சமூகத்தில் ஆண்களும் பெண்களும் மற்றப் பாலினரின் உடல், மன வளர்ச்சி பற்றி அறியாமலும் வளர்க்கப்படுகிறார்கள். மட்டுமன்றி திடீரென்று ஒரு நாள் மற்றப் பால் ஒருவருடன் திருமண பந்தத்திலும் இணைக்கப்பட்டு இனவிருத்தி செய்கிறார்கள். ஆம், பெரும்பாலானவர்களின் குடும்ப வாழ்க்கை இனவிருத்திக்காகத்தான்.

எதிர்ப்பாலாரின் உடல் மன வளர்ச்சி பற்றி எதுவுமே தெரியாமல் வளர்க்கப்பட்டு, அதைப் பற்றிய காவியப்படுத்தல்களை அல்லது தவறான எண்ணங்களையும் மட்டுமே தனக்குள் வளர்த்துக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்திடம் பாலியல் தெளிவை எதிர்பார்ப்பது நியாயமானதுதானா என்பது எம்மை நாமே கேட்கவேண்டிய கேள்வி. ஒரு ஆண்மகன் வயதுக்கு வந்து தனது காமத்தைத் தீர்த்துக்கொள்ளத் தேடும் உடலாகவே பெண்ணின் உடல் கவனிக்கப்படுகிறது. பெண்ணோ தன் உடலை வெளிப்படுத்துவது அவமானமானது, அதை ஒருவன் பாவித்துவிட்டால் அது பெறுமதியை இழந்துவிடும் அதனால் எதிர்காலத்தில் தனது வாழ்க்கையை இன்னொருவன் கையில் ஒப்படைக்க முடியாது என்று நினைத்து வளர்க்கப்படுகிறாள்.

இந்தக் கருத்து நிலவும் சமூகத்தில் குடும்பத்தின் ஆண்களின் கையில்தான் அக்குடும்பப் பெண்களின் "பாதுகாப்பு" இருப்பதாகக் கருதப்படுகிறது. "என் வீட்டுப் பெண்களை நான் காப்பாற்றுவேன், முடிந்தால் உன் வீட்டுப் பெண்களை என்னிடமிருந்து காப்பாற்றிப் பார்!" என்பதுதான் இதன் மூலம் தெரிவிக்கப்படும் செய்தி.

இந்த நிலைமையை மாற்றுவதற்கும் முக்கியமாகக் ஜனநாயக உரிமைகளையும், பொறுப்புக்களையும் முன்னிறுத்தும் கல்விமுறை அவசியம்.

அதேசமயம் அரசு தன் கையில் இருக்கும் நீதித்துறை மூலம் தனி மனிதனின் உரிமைகளைப் பேணவேண்டும். மீறுதல்கள் தெளிவான சட்டங்களால் வரையறுக்கப்படல்வேண்டும்.

அதேசமயத்தில் ஆண்களும் பெண்களும் மறுசாராருடன் சரளமாகப் பழகிவரும் வாய்ப்பை உண்டாக்கி அவர்களுக்கு மறுசாரா-ரின் வாழ்வையையும் எண்ணங்களையும் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு எமது சமூகம் வழிவிட்டே ஆகவேண்டும். பெண் - ஆண் உறவு என்பது வெறும் பாலியல் சம்பந்தப்பட்டதல்ல அதையும் மீறி ஒரு மனிதத்தனமான, இயல்பான உறவுமுறை என்பது சமூகத்திற்குத் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.

எனது கருத்துப்படி பாலியல் தெளிவு என்பது பாலியல் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்காகக் குற்றம் செய்பவர்களைக் கடுமையான தண்டனைக்கு உள்படுத்துவது அல்ல. பாலியல் தெளிவு என்பது சமூகத்தின் ஒரு ஆரோக்கியமான மனோநிலையாக பல கோணங்களிலும் அணுகப்படல் வேண்டும். அதில் சமூகமும், கல்வியும், அரசும், நீதித்துறையும் முக்கிய பொறுப்புக்களை எடுத்து ஒருவரை ஒருவர் அங்கீகரித்து நீண்டகாலக் குறிக்கோளை உண்டாக்கி அதை ஒவ்வொரு படியாகக் கடக்கவேண்டும்.

அவசாமாக உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்களால் அணுகும் ஒரு விடயமல்ல இது. குற்றவாளியாக ஒரு தனிமனிதனல்ல இங்கே சமூகம்தான் நிறுத்தப்படுகின்றது. இதைத் திறந்த கண்களுடன் ஜீரணித்துக்கொண்டு படிப்படியாக முன்னேற எங்கள் சமூகம் நெருப்புக் குளிக்கத் தயாராகட்டும்.



# காத்திருப்பு




அந்த வீடு வெறுமையாக
இருக்கக்கூடாது என்பதற்காக,
எல்லாவற்றையும்
உட்புக அனுமதித்து
ஒரு சாளரத்தைத் திறந்து,
அவை அந்த வீட்டினுள்
புகுந்துகொண்டன.
வெளிச்சம், சத்தங்கள்
உரையாடல்கள்,
அந்தக் கடலும் அதன் வெண்மிளிர்வும்,
வெண்கலக் கண்ணுடைய
அந்த வெள்ளைப் பறவை,
இங்கு உயிர்க்காத,
உயிர்வாழமுடியாத
மலர்களின் முகங்கள்,
வேற்றுமொழி ஒன்றின்
இறந்தகால வடிவம்
எல்லாவற்றையும்
தம் தாயகத்திலிருந்து
அவை தம்மோடு
எடுத்துக்கொண்டு வந்தன.
வரவின்
முன்பும் பின்பும்,
அவற்றின் கைகளின் கணச்சூட்டை வீசி,
அந்த இரவின் திருட்டை அனுமதித்து
சாளரத்தை இறுக்கமூடி,
அதன்மூலம் தாம் வந்தடைந்துவிட்டதாக
அவை தம் வரவை
நினைவூட்டிக்கொண்டன.
அங்கே இருந்த
ஒரு கண்ணாடிக் கதவிற்குப்பின்னால்
நின்றுகொண்டு,
காலால் பிராண்டியபடியும்,
அந்தத் தனிமையின்
நீலநிற வாசனையை
மோப்பம்பிடித்தபடியும்,
ஒரு நன்றிமிக்க நாயாக
அவை காத்திருந்தன,
அவற்றின் மறுபிறப்பிற்காக!

# ஓர் பேரிடிப்பும் தாக்கமும்

அஞ்சரன்



வித்தியாவின் இழப்பு என்பதற்கு அப்பால் ,அதில் இருந்து குடும்பம் மீண்டு வருவதும் அல்லது அவள் நினைவில் மாண்டு போவதுமாக ,நித்தம் நித்தம் கண்ணீரும் சோறுமாக அவள் பேச்சும் குறும்பும் விளையாட்டு சீண்டலும் என்று ஒரே ஆரவாரம் ,சிரிப்பொலியுடன் இருந்த வீடு இன்று பெரும் சோக முகில்களை தாங்கி இருண்டு எப்பொழும் விம்மி வெடிக்கும் கனத்த இதயத்துடன் ,அன்பான அவளது குரல் இல்லாது செவிகள் இனிமையான ஒலிகளை கூட கேட்க மறந்து கிடக்கிறது .....இவற்றுக்கு எல்லாம் அப்பால் அந்த கொடும் துயரின் பிடியின் இறுக்கத்தில் இருந்து தளர்வுகள் வரும் போது எல்லாம் ,சுற்றி உள்ள சமூகம் சரி இணையங்கள் ஊடகங்கள் என்று ஏதாவது ஒன்று ,அந்த ரண வேதனையை மீண்டும் பெரும் ஈட்டி கொண்டு தாக்குவது சொல்லனா துன்பம்

தங்களுக்குள் எழும் சுய இன்ப கேள்விகளை வித்தியா என்னும் பிஞ்சின் மீது எறிவதும் காணாது என்று அவள் குடும்பம் மீதும் அள்ளி தெளிப்பது கூட ஒரு சில மனிதர்களுக்கு பேரின்பத்தின் திளைப்பை கொடுகிறது போலும்

பெற்ற பிள்ளையை பெரும் போரின் பிடியிலும்,பொருளாதார கஷ்டத்தின் மத்தியிலும் தன் நோய் இயலாமையை கூட பொருள் படுத்தாது கட்டைக்கனக்காக சைக்கிள் மிதித்து தந்தை பெரும் கனவுடன் வளர்த்த மகளை ஆளாகி தேவதை போல் அலங்கரித்து ,தன் சுமைகளை ஒற்றை ஆளாக அவள் சுமப்பாள் பாரு என்று செருக்குடன் வாழ்த் அந்த தாய் தந்தை மனநிலை எப்படி துடிக்கும் பதைக்கும் என்று கூட அறியாத சில மூடர்கள் அவர்களை பெரும்பாலும் மனிதர்களாகவே எடுக்க கூடாது ,பிள்ளையின் பிரிவி-ின் ஊடாக உங்களுக்கு வீடு தந்ததாம் காசு தந்ததாம் என்று நலம் விசாரிக்கும் சாட்டில் விடுப்பு கேட்கும் தருணங்கள். உலகில் இவர்களும் வாழ்கிறார்கள் என்றே சாபிக்கும் ஒரு நாள் பொழுது ஓயாது ஒலிக்கும் தொலைபேசியில் ,எவர் அன்பு விசாரிக்க எடுக்கிறார் ,எவர் வம்பு அளக்க எடுக்கிறார் ,எவர் வழக்கின் போக்கை கேட்க எடுக்கிறார் என்று குழம்பியே தொலைபேசியை கையில் எடுக்க வேண்டிய ஒரு பதட்டமான மன சூழலை உருவாக்கி விடுகிறது இந்த நல்ல மனிதர்கள் வேஷம் போடும் அயோக்கியர்கள் கேள்விகள்.

சங்கங்கள்,அமைப்புகள்,நிறுவனங்கள் எல்லாம் உணர்ச்சி பெருக்கில் வித்தியா குடும்பத்துக்கு உதவி செய்கிறோம் என்று அவளின் இறுதி நாள்களில் ஒலிவாங்கி முன் ஓலம் இட்டுவிட்டு போய் விட்டார்கள். அவர்களின் ஓலங்களில் சிக்கி தவிப்பது என்னமோ அவளின் குடும்பமே ,ஊருக்கும் பேருக்கும் புகழுக்கும் வசித்து விட்டு போனவர்களுக்கு தெரியாது ,சுற்றி இருந்து விடுப்பு பார்க்கும் சமூகம் சீட்டு கணக்கு போல் இதை எழுதி வைக்கும் அல்லது மனப்பாடம் செய்யும் என்று .

அங்கிருத்து இவ்வளவு வந்ததாம் ,இங்கிருத்து இவ்வளவு வந்ததாம் ,அவர் கொடுத்ததாம் இல்லை இவரும் சேர்த்து கொடுத்ததாம் கிட்டத்தட்ட நல்ல காசு வந்திருக்கும் என்று பேசும் ,மனிதர்களாக உலாவும் விஷ ஜந்துக்கள் அறியமாட்டார் அவர்கள் நாளை என்ன சமைப்பார்கள் என்று

நித்தம் அவள் பிரிவு கொடுக்கும் வேதனையை விட

இந்த பரிகசிக்கும் மனிதர்கள் கொடுக்கும் வலி மிக கொடியது .வித்தியா குடும்பம் அன்றும் இன்றும் இருக்கும் நிலை ஒன்றுதான் மறுத்தால் இப்பொழுது வித்தியா இல்லை என்பதே தவிர மற்றும்படி அவர்களின் வாழ்க்கை சம ஓட்டமே .யாழில் ஒரு வாடகை வீட்டுக்கு கூட சிரமப்படும் நிலையில் இருந்துகொண்டு வந்த லட்சங்களை என்ன செய்வார்கள் இவர்கள் என்று பின்னாடியே சுற்றும் பேய்களை என்னவென்று சொல்வது .
வீடுதரலாம் என்று சொல்பவர்கள் நேரில் போனால் .ஓ நீங்க வித்தியா குடும்பமா பொலிஸ் கேஸ் விசாரணை என்று ஆக்கள் அடிக்கடி வந்து போவீனம் அதாலால் உங்களுக்கு வீடு தருவது எங்களுக்கு கடினம் என்று சொல்லும் போதும் நாம் இவர்களை நினைத்து கவலை கொள்வதா இல்லை வித்தியாவை நினைத்து கண்ணீர் விடுவதா அதன் மன அழுத்தம் உளைச்சல் எத்தகையது .
நீதியை கேட்கும் கேட்க போராடும் அல்லது போராடுறம் என்று சொல்பவர்கள் முதலில் .சம தர்மம் ஊடக தர்மம் கொண்டாவது நீதிக்கு வாய்ப்பு கொடுங்கள் .நீங்கள் போடும் புகழ் தேடிய வெளிச்சத்தில் வித்தியா என்னும் மெல்லிய ஒளி தெரியாமல் போய் விடும் மனிதநேயத்தின் பெருமான்களே .

நீங்கலாக வந்து கைகளை கொடுத்து விட்டு .இதில் எனக்கு எந்த இலாபமும் வாராது எதுக்கு மினக்கெடுவான் என்று நினைத்து .பொய்களை பலிகளை உதிர்த்து விட்டு .உங்கள் சித்து விளையாட்டுகளை காட்டி விட்டு நீங்கள் போய் விடுவீர்கள் அடுத்த வருமானம் நோக்கி ஆனால் நாம் அதே திண்ணையில் இருந்து நீங்கள் எங்களுக்கு உதவி என்னும் பெயரில் பெரும் உபாதை கொடுத்ததை நாம் யாரிடம் சொல்லி அழுவோம் ..
ஆகவே மன அழுத்தத்தின் உச்சிக்கு செல்லும் வேளைகளில் .குற்றம் இழைத்தவர்களை கூட மன்னிக்கலாம் ஆனால் இந்த வீம்பு பேசி விசரை கிளப்பும் மூதேவிகளை கொன்று போட்டால் என்ன என்று மனம் சிலவேளை சந்நிதம் ஆடுவது தவிர்க்க முடிவதில்லை .
கண்களில் கண்ணீரும் இன்றி இருக்கும் அவர்களை விட்டு விடுங்கள். உங்கள் உதவிகள் என்னும் முள்கள் கொண்டு கீறி கிழிக்காது .சமூக நீதிகளே .



அடன்சோனியா கிரான்டிடியரி மடகாஸ்கரின் மிகவும் புகழ்பெற்ற ஆறு பாஓபாப்களுள் (பெருத்த அடி-பாகம் கொண்ட மரங்கள்) ஒன்று. தீவாய்ப்புள்ள இவ்வினம் அடன்சோனியா என்ற பேரினத்தைச் சார்ந்தது. இது மடகாஸ்கரின் அகணிய உயிரி ஆகும். இம்மரத்தின் பெயர் ஃப்ரெஞ்சு தாவரவியலாளர் ஆல்ஃப்ரெட் கிரான்டிடியரின் (1836-1921) பெயரிலிருந்து வைக்கப்பட்டதாகும். இம்மரத்தின் முழுமையான தோற்றம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை



# பிள்ளைபிடிகாரர்களின் உணவகம்

எங்காவது ஒரு மேற்குலக நகரத்தில் பொருளாதார உச்சி மகாநாடு நடைபெற்றால், அங்கே முதலில் தாக்கப் படுவது மக்டொனால்ட்ஸ் ரெஸ்டாரன்ட் ஆக இருக்கும். மகாநாட்டை எதிர்த்து தெருவில் ஊர்வலம் போகும் எதிர்ப்பாளர்கள் வழியில் மக்டோனால்ட்சை பார்த்தால் கல் எடுத்து வீசாமல் போக மாட்டார்கள். அனைவருக்கும் தெரிந்த உலகமயமாக்கலின் சின்னமான மக்டோனால்ட்சை அடித்து நொறுக்குவதில் அவர்களுக்கு அவ்வளவு குஷி. இதனால் மகாநாடு நடக்கும் சமயம், முதல் நாளே உணவு விடுதியை பூட்டி விட்டு, கண்ணாடிகளுக்கு மேலே பலகை அடித்து விட்டு போவார்கள்.

Ads delivered by FeedBlitz

மக்டொனால்ட்ஸ் எந்த சத்துமற்ற சக்கையை விற்று காசாக்குகின்றது, என்ற விழிப்புணர்வு மெல்ல மெல்ல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டு வருகின்றது. அதனால் மக்டொனால்ட்ஸ் நிர்வாகம், "உள்நாட்டில் வாங்கிய தரமான உணவுப் பொருட்களை கொண்டு தயாரிப்பதாக" அடிக்கடி காதில் பூச் சுற்றும். மக்டொனால்ட்ஸ் உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்க பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள் பல்வேறு வியாதிகளை உருவாக்குகின்றன. மக்டோனால்ட்சின் தாயகமான அமெரிக்காவில், "ஹம்பெர்கர்" தின்று கொழுத்த சிறுவர்கள் ராட்சதர்கள் போல காட்சி தருவார்கள். (உலகிலேயே பெரிய்ய்ய்ய நாடல்லவா. அங்கே எல்லாம் பெரிசு பெரிசாக தான் இருக்கும்.)

மக்டொனால்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்ட மேற்கு ஐரோப்பிய பொது மக்கள், அங்கே சாப்பிடுவதை தரக் குறைவாக கருதுகின்றனர். ஆனால் இந்தியாவிலோ நிலைமை தலை கீழ். வசதியான நடுத்தர வர்க்க இளைஞர்கள் மக்டோனால்ட்சை மொய்க்கிறார்கள். அங்கே சாப்பிடுவதில் ஒரு பெருமிதம். அமெரிக்காவில் இருந்து எந்த குப்பையை இறக்குமதி செய்தாலும் அவர்களுக்கு இனிக்கும். மேற்குலகில் தோன்றியுள்ள மக்டொனால்ட்ஸ் எதிர்ப்பு அலை பற்றி, இந்திய மேன் மக்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். (நீங்க எல்லாவற்றிலும் too late)

கடந்த பத்தாண்டுகளில் வணிகவியல் படித்த மாணவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர்களது மார்க்கெட்டிங் வகுப்பில் மக்டோனால்ட்சின் "வெற்றியின் இரகசியம்" பற்றி கற்பித்திருப்பார்கள். அது என்ன பெரிய "மார்கெட்டிங் புரட்சி"? குழந்தைகளை கவர்ந்திழுக்கும் அன்பளிப்புகளை, (மக்டொனால்ட்ஸ் சின்னம் பொறித்த)விளையாட்டுப் பொருட்களை கொடுக்கிறார்கள். அதனால் குழந்தைகளே பெரியவர்களை ரெஸ்டாரன்ட் பக்கம் இழுத்து வருகின்றன. வழியில் மக்டோனால்ட்சை கண்டால் அங்கே போக வேண்டுமென்று அடம் பிடிக்கும் குழந்தைகள் எத்தனை? குழந்தைகள் வந்தால் கூடவே பணத்துடன் பெற்றோரும் வருவார்கள் என்று அவர்களுக்கு தெரியும். இது ஒன்றும் மகத்தான மார்க்கெட்டிங் கிடையாது. "பிள்ளைகளுக்கு இனிப்புக் கொடுத்து கடத்தும் பிள்ளைபிடிகாரர்களின் கயமைத்தனம்." இப்படிக் கூறுகிறது அமெரிக்காவில் ஆய்வு செய்த Centre for Science in the Public Interest (CSPI).

உணவு உற்பத்தி தொழிற்துறையை ஆய்வு செய்யும் அந்த வெகுஜன நிறுவனம், மக்டொனால்ட்ஸ் நீதியற்ற, ஏமாற்றும் மார்க்கெட்டிங் மூலம் பிள்ளைகளை கவருவதாக குற்றஞ் சாட்டியுள்ளது. குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு விளம்பரம் செய்வதானது, நுகர்வோர் பாதுகாப்பை மீறும் செயல் என்று எச்சரித்துள்ளது. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சத்தான உணவை சாப்பிட பழக்குவதற்கு மக்டொனால்ட்ஸ் தடையாக இருப்பதாக அது மேலும் குற்றம் சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் அடங்கிய கடிதம் மக்டொனால்ட்ஸ் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. எண்ணி முப்பது நாட்களுக்குள் மக்டொனால்ட்ஸ் தனது "பிள்ளை பிடி மார்க்கெட்டிங்கை" நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் வழக்குத் தொடுக்கப்படும். நிச்சயமாக மக்டொனால்ட்ஸ் நிர்வாகம் இது குறித்து மகிழ்ச்சியடைந்திருக்காது. அவர்களைப் பொறுத்த வரையில் நமது குழந்தைகளின் நலன் முக்கியமல்ல, நமது பாக்கெட்டில் உள்ள பணம் தான் முக்கியம்.

நன்றி கலையகம்

# ஒரு பார்வை






நாவலர் குறும்பட விருதை தட்டிச்சென்ற "ஏன் இஞ்ச வந்தனி"குறும்பட குழுவினருக்கு வாழ்த்துக்கள்.ஈழத்தமிழனின் போராட்ட வாழ்வின் கதையை ஒரு குறுகிய நேரத்தில் கூறுகின்றது ஜனாவின் "ஏன் இஞ்ச வந்தனி" என்ற குறும்படம்.கதையின் நாயகன் பதுங்கு குழியில் பிறந்து வளர்ந்து புலம்பெயர்ந்து அங்கேயும் அகதிநிலை மறுக்கப்பட்டு நாடு திரும்பி அனுப்பப்பட்டு அழிக்கப்படுவதை மிக மிக அழகாக வலி-யோடு காட்சிப்படுத்துகின்றது.கதை நகர்ந்து கொண்டிருக்கும்போது சமுதாய பிற்போக்குத்தனங்களும் பொது மகன்மீது மேற்கொள்ளப்படும் இராணுவ அடக்குமுறை வடிவங்கள்.சித்திரவதைகள் மிக அப்பட்டமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.கதையின் பாத்திரம் புலம்பெயர்ந்து. தன் உண்மை நிலையை வெளிநாட்டு அரசுக்கு விளங்கப்படுத்தியும் இங்கு அகதி அந்தஸ்து நிலை மறுக்கப்படுகின்றது.இறுதிப்பகுதியில் இந்தியாவின் துணையோடு இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்பின் இறுதிநாளில் கோரத்தனம் உண்மை யோடு காண்பிக்கப்பட்டுகின்றது. இந்தியாவை அடையாளப்படுத்திய விதம் இயக்குனரின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படையாக காண்பிக்கின்றது.

எம் வலிகளை காட்சிப்படுத்தும் இக்குறும்படம் நிறையவே செய்திகளை பதிவு செய்துள்ளது.இக்குறும்படக் கதை வடிவமைப்பில் இயக்குனர் மிகவும் சிரமப்பட்டிருக்கின்றார் என்றே கூறவேண்டும் இக்குறும்படத்தின் கதை உள்ளடக்கம் ஒரு முழு நீள திரைப்படத்திற்கு உரியதாகவே எண்ணத்தோன்றுகின்றது.அதனால் கதையை காட்சிப்படுத்தி விதம் துண்டம் துண்டமாக இருப்பது போன்று உள்ளது. நடிகர்களின் நடிப்பு நன்றாக இருந்தாலும் சில இடங்களில் பிசிறல் தென்படுகின்றது.அத்தன்மை பார்வையாளர்கள் கவனத்தை படத்தில் இருந்து சற்று விலக்குகின்றது.

ஜனாவின் முன்னைய படங்களைபோல் இல்லாமல் இது ஒரு மாறுபட்ட வளர்ச்சியை காட்டுகின்றது.இப்படத்திற்கு நாவலர் விருது வழங்கப்பட்டது எமக்கான ஒரு சாட்சியத்தின் பதிவை நாங்கள் அடையாளப்படுத்தி வைத்துள்ளது அந்த வகையில் தெரிவுக்குழுவுக்கு நன்றி.

**தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**

# $l;lhsp jpiuggl ,af;Fdh; epNuaDld;




**கூட்டாளி திரைப்படத்தின் திரைக்கதைப்பின்னனி பற்றி அறியத்தாருங்கள் ?**

தமிழிழும் மலர்ந்தால் அந்த மண்ணும் மனிதர்களும் எப்படியிருப்பார்கள் என்பது தான் கதை.

**இக்கதையை ஒரு திரைப்படமாக ஆக்க எண்ணியதன் நோக்கம் ?**

கூட்டாளி திரைப்படத்தை நான் எடுப்பதற்கு காரணம் எமது மாவீரர்கள். இதிலே அவர்களின் விருப்பம்.ஆசை.கனவு.தங்கியுள்ளது. தெற்கு சுடானுக்கு பிறகு 194 வது நாடக ஈழம் மலர்ந்தால் எப்படி இருக்கும் என்பதும் இடம் பெயர்ந்து அன்னிய தேசங்களில் அல்லல்ப்படும் எமது மக்களின் விருப்பம் தான் என்ன ? எதற்கு இத்தனை ஆயிரம் உயிர் பலிகள். எம்மை சுற்றி என்ன நடக்கிறது. எமக்கும் அன்பு.பாசம்.ஏக்கம்.கோபம்.வீரம்.காதல் பொறுமை என்பன உண்டு என்பதை ஒரு அழகான திரைக்காவியமாக உருவாக்கி உள்ளேன்.

**கடும் தடைகளைத்தாண்டி இப்படம் திரைக்கு வரப்போகின்றது தடைகளை அனுபவித்தவன் என்பதற்கு அப்பால் இன்று உங்கள் மன நிலை?**

எல்லா தொழில்களிலும் தடைகள் உண்டு. குறிப்பாக ஈழத்தமிழர்கள் தடைகளின் மத்தியில் தானே வாழ்கின்றோம். எனவே நான் இப்போ மகிழ்ச்சியாக உள்ளேன்.

**ஈழத்தவன் தமிழ்நாட்டில் ஒரு சினிமாவை பதிவாக்கும்போது முழுமையான ஆதரவு கிடைக்கின்றதா அல்லது தடைகள் பின்புல சதிகள் ஏற்படுகின்றதா?**

ஆதரவும் இருக்கும் தடைகளும் இருக்கும்.

**ஈழசினிமா மீது முதலீட்டாளர்களின் ஈடுபா எவ்வாறு உள்ளது ?**

மிக மிக குறைவாக உள்ளது.

**இன்றைய ஈழசினிமாவின் வழர்ச்சியை எவ்வாறு பாக்கின்றீர்கள்?**

முற்காலத்தை விட தற்போது அதான் வளர்ச்சி அதிகரித்துள்ளது. குறிப்பாக ஈழத்தில்.




**புலத்திலும் நாட்டிலும் வாழும் ஈழக்கலைஞர்கள் உறவு நிலை எவ்வாறு இருக்கின்றது?**
சிறப்பாக உள்ளது. எமக்குள்ளே பிரிவினை வேண்டாம்.

**கூட்டாளி திரைப்படம் சார்பாக முகடு இதழ் ஊடாக சினாமா இரகசிகர்களுக்ககு நீங்கள் என்ன சொல்ல விரும்பு கின்றீர்கள் ?**
சரியான நேர்த்தியான படைப்புக்களுக்கு ஆதரவு கொடுங்கள். குறிப்பாக ஈழத்திரைப்பங்களை யார் எடுத்து இருந்தாலும் காரியம் இல்லை ஒரு தடவை என்றாலும் பாருங்கள். காரணம் ஈழத்தமிழன் எல்லோராலும் ஒதுக்கப்படுகிரன். இது தான் உண்மை.
**தமிழ்நாட்டில் உங்கள் திரைப்படத்துக்கு ஏற்பட்ட தடையை விபரிக்க முடியுமா?**
காவல் துறை கைதுமட்டும் சென்றுவந்தேன். இதற்குமேல் சொல்லவேண்டுமா?
**ஈழுந்து நடிகர்கள் நடிகைகளுக்கு என்ன சினிமா சார்ந்து சொல்ல சொல்லுவிரும்பு கிறீர்கள்?**
முடிந்தால் தமிழ்நாடு வந்தாவது கற்றுக்கொள்ளுங்கள் பயனாக இருக்கும்

# பாரிஸில் நடை பெற்ற தமிழ் இன அழிப்பு நாள்




மே18 தமிழ் இன அழிப்பின் உச்சத்தின் ஆறாம் ஆண்டும் வணக்க நிகழ்வு மனவலியோடும் இன உணர்வோடும் வருகைதந் மக்களால் மிகவும் உணர்வு பூர்வமாக தீபங்கள் ஏற்றி மலர் வணக்கத்துடன் அனுஷ்டிக்கப்பட்டது.

தங்களைத் தமிழ் தேசியத்தின் முழுக்காவலராக உணர்தும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் செயற்பாடுகள்.அழிவுகளின் கற்பிதங்களில் இருந்து அடுத்தகட்ட நகர்வுக்கான முற்நேற்றமான எந்த இயலும்மற்ற ஒழுங்கில் காணப்பபடது. அடுத்தகட்டம் என்பது
மூன்றாம் தலைமுறை இளையவர்களின் பங்களிப்பு.இது எதிர்கால நகர்வை ஒரு கேள்விக்குறியாகவே காட்டியது. புலம்பெயர்ந்து வாழும் நாட்டு மக்களுடனான உறவு. அது எமக்கு மிக மிக அந்நியப்பட்டதாகவே காணப்பட்டது. நினைவுநாட்களில் நாங்கள் எடுக்கவேண்டிய சத்தியப்பிரமாணங்கள் காணப்படவில்லை என்றே கூறவேண்டும்.ஆனாலும் வார்தைக்கு வார்தை ஒற்றுமை என்ற பதம் அழுத்தமாக பேசப்பட்டது.

இன அழிப்பின் உச்சம் நடைபெற்று ஆறாண்டுகளின் பின்னும் நாம் இன்னமும் எம்கதையை எம்வாயல் கேட்பது போன்ற ஒரு பிரமையை உயிர்பிக்கும் முகமாக தமிழக வாழ்வுரிமைக்கட்சியின் தலைவர் வேல்முருகனின் உரை அமைந்தது அவரின் உரை தொடங்கவும் மக்கள் இவர் பேசுவது யாருக்கு என்ற கேள்வியை தங்களுக்குள் எழுப்பி நிகழ்வு மேடையை விட்டு மெது மெதுவாக அகன்றனர்.
தொடர்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஒரு நினைவுபடுத்தும் சம்பிரதாயச்சடங்காக வருகைதந்தவர்களுக்கு சலிப்பையும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள்மீது கடும் விசனத்தையும் ஏற்படுத்தியது.
மக்கள்வருகை வழமையை விட குறைந்து கொண்டு செல்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.இந் நிகழ்வில் கூடியது
ஐந்நூறு போருக்குமேல் வரவு இருக்கவில்லை. இந்நினைவுநாளில் தமிழ் மக்களுக்கான எந்த எதிர்கால நலனுள்ள உறுதிமொழிகளும் பரிமாறப்படவில்லை.புராண கதைபோன்று பழைய கதைகளே நினைவு படுத்தப்பட்டது.

முழுமையில் இது ஒரு துயர நிகழ்வு.

# தேர்

ப.பார்தீ



நகர வாசல்  அடைக்கப்பட்டு
இறக்குமதி செய்யப்பட்ட
அலங்காரங்களில்
ஊற்றாகிப்போன மூடப்பழக்கங்களுடன்
மூன்றாம் உலக யுத்தத்திற்கு
தயாரான குண்டுகள் போல்
குவிக்கப்பட்ட தேங்காய்களுக்கு
பக்திமுலாம் பூசப்பட்டு
புனிதம் என்ற சொல்லுடன்
வீதியில் குவிக்கப்பட்டிருந்தது

என்றோ ஓர் நாள் சாத்தியமற்ற
இயற்கைக்கு புறம்பான
உருவத்ததோடு கூடிய
அந்த சிலை ஏற்றப்பட்ட
ஊர்திக்கு சக்தி கொடுக்க
மனிதர்கள்

எல்லாம் சத்தி மயம் என்று எண்ணி
வீதியில் விழுந்த நீரினை
கண்ணில் ஒற்றும் காட்சி
பார்வையின் உண்மைத் தன்மையை
கேவலப்படுத்தியது

பசியின் உணர்வை மறந்த வயிறுகள் எல்லாம்
இலவச சோற்றுக்கு
இன்னும் பைகள் நீளாதா
என்ற ஏக்கத்தில்
முண்டி மோதியது

சாம்பல் நிறப்பப்பட்ட
சட்டியில் தீச் சுவாலை
பருக நீர் இல்லாத வறுமையில்
உலகம் வாடும்போதும்
செம்பு நிறைந்த பால்
பாழடிக்கப் படுகின்றது
எல்லாம் அவர்கள் செய்தும்
அவனுக்கே போகுதென்பார்
ஓர் சொல்லில்

இனும் அந்தக் காடசிகளில் இருந்து
சிலிர்த்தெழாத
மனச்சாட்சிகள்
அடுத்த வருடத்திற்கு
அடிக்கல் இட்டு
தங்களை புனிதராக எண்ணி
மீண்டும்  மீணடும் உணவின் நடுவே
நஞ்சை விதைப்பர்
6ம் அறிவு இருந்து என்ன பயன்

---

# கண்ணம்மா என்னும் அழகி

இரா.சக்தி



மொட்டைமாடிக் காற்றின் சிலுசிலுப்பில்
கையில் இருந்த புத்தகத்தைக் கூட மறந்து மலை நேர மேகக் கூட்டங்களை ரசித்துக் கொண்டிருந்தேன். இந்த வானத்தில் தான் எத்தனை வர்ணாங்கள் .. ஒவ்வொரு மேகக் கூட்டமும் ஏதேதோ உருவத்தோடு. இயற்கையின் படைப்புத்தான் எவ்வளவு அழகு ..பார்க்க பார்க்க சலிக்காது எனக்கு.. இன்றும் அப்படித்தான் நேரம் போவதே தெரியாமல் நின்ற என்னை .."ஐயோ அம்மா … அடிக்காதிங்க அடிக்காதிங்க.. என்னும் பெண் குரலும் … சிறு குழந்தையின் அழுகையும் இவ்வுலகத்திற்கு இழுத்து வந்தது..

எமது குடியிருப்பிலா இப்படிச் சத்தம் … ஆச்சரியமாக இருக்கிறதே ..

ஏனென்றால் தொடர் வீடுகளைக் கொண்ட நாகரீக மக்கள் வாழும் அப்பார்மென்ட் இது .. பக்கத்து
வீடுகளில் வசிப்பவர்கள் பெயர் கூடத் தெரியாத , நுனி நாக்கு ஆங்கிலத்தில் வாழ்க்கையை ஓட்டும் சென்னையின் உயர்ந்த மட்டத்தார் வசிக்கும் இடம் ..இங்கு இப்படி ஒரு குரலா… அவசரமாய் எட்டிப் பார்த்தேன் .. பக்கத்து காலி இடத்தில் புதிய கட்டிடம் ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடந்து கொண்டிருந்தன … அந்த இடத்தில் ஒரு சிறு குடிசை … அதில் தான் இந்த சத்தம் … வாட்ச்மேன் போய் எதோ பேசுவது தெரிந்தது ,அதற்கு பின் சத்தம் ஏதுமில்லாமல் அமைதியானது…

எம் வீட்டு வேலைக்காரி செண்பகம் காலையில் வந்தால் இந்த அப்பார்மென்ட் செய்தியெல்லாம் ஒரு வரி விட்டாமல் சொல்லி விட்டுத்தான் தான்
வேலையைப் பார்க்க போவாள் ..என் பாட்டிக்கு செண்பகம் வராவிட்டால் தலை வெடித்து விடும் … என்னதான் அடுத்த வீட்டார் பெயர் தெரியாவிட்டாலும் ,அடுத்த வீட்டு விஷயம் தெரிந்து கொள்ள ஆவல் விடாது தானே …

பத்திரிக்கை ஒன்றைப் புரட்டியபடி .. நானும் செண்பகத்தின் வார்த்தைகளில் தொலைந்து கொண்டிருந்தேன் ..அந்த பெண்ணின் பெயர் “கண்ணம்மா“ வாம் … அவள் கணவன் இந்த புது கட்டிடத் பகுதியில் வேலை செய்பவனாம்… அதோடு இந்த பொருட்களுக்கு காவலாய் குடிசை போட்டு இங்கே தங்கி இருகிறார்களாம் .. ஒரு குழந்தையோடு….

“அம்மா நேத்திக்கு பூரா ,எல்லா வீட்டிலையும் இந்த கண்ணம்மா பத்திதாம்மா ஒரே பேச்சு …ஒரே சத்தம் என்று கம்பளைண்டாம் … “என்று சொல்லிக் கொண்டிருந்தாள் ..

குடிகார புருசனின் அடியும் , கண்ணம்மாவின் சத்தமும் அடிக்கடி கேக்கத் தொடங்கியதும் , அதை வேடிக்கை பார்ப்பதும் வாடிக்கை ஆகிவிட்டது எமக்கு ….அவளின் குழந்தைக்கு ஒரு ஆறு வயசிருக்கும் , கறுப்பாய் துரு துறுவென்று இருப்பான் .அப்பார்மென்ட் குழந்தைகளுக்கு அவன் ஒரு வேடிக்கைப்
பொருளாகி விட்டான் …அவர்கள் இவனை விளையாட்டில் சேர்க்காததால் , அவர்களை ஓரமாக நின்று பார்ப்பதும் ,பின் தாயிடம் ஓடிச் செல்வதையும் பார்த்திருக்கிறேன் ..வறுமையின் அத்தனை அடையாளங்களோடு , அங்காங்கே ஒட்டுப் போட்ட புடவையுடன் கண்ணம்மா சுற்றி வருவது எம் குடியிருப்பு வாசிகளுக்கு முகச் சுழிப்பை ஏற்றிக் கொண்டிருந்தது..

அன்றும் அப்படித்தான் வழக்கம் போல ஒரு மாலை நேரம் .. அலுவலம் முடித்து திரும்புகையில் எதோ ஒரு புயல் அடித்து ஓய்ந்திருப்பது தெரிந்தது… வீட்டில் செண்பகத்தின் குரல் ..

என்ன துணிச்சல் தெரியுமாம்மா அந்தக் கண்ணம்மாவுக்கு … என்று சொல்லிக் கொண்டிருந்தாள் …
என்னாச்சு கண்ணம்மாவுக்கு… எனக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தேன் ..

அது வந்தும்ம்மா நம்ம பேங்க் ஆபிசர் பிள்ளை …அது தாம்மா அந்த சந்தோஷ் தம்பி காலையில் துப்பரவு செய்ய திறந்து வைத்த சாக்கடை குழியில விழுந்து விட்டான் …
ஐயய்யோ என்னாச்சு …..அவனுக்கு ஒன்னும் இல்லையே …
பையனுக்கு ஒன்னும் இல்லம்மா எல்லாம் அந்தக் கருமாரி அம்மா தான் கண்ணம்மா உருவத்தில வந்து காப்பாத்தி இருக்கா…
சரி சொல்லு என்னாச்சு என்றேன் படபடப்போடு …
நம்ம பசங்க எல்லாம் விளையாடிக் கொண்டிருக்க பந்து அந்தக் குழியில , விழுந்திட்டுதாம். அப்ப அதை எடுக்கப் போன சந்தோஷ் அந்தக் சாக்கடையில விழுந்திட்டானாம் .அந்தக் கண்ணம்மா பையன் இருக்கானில்ல அவன் சந்தோஷோட கையைப் பிடித்துக் கொண்டு கத்தி இருக்கான் .அவன் சத்தத்தைக் கேட்டுக் எல்லோரும் ஓடி வந்திருக்காங்க , அதுக்குள்ள அவன் கையில இருந்து நழுவி விழுந்திட்டன் கீழே…
எல்லோரும் வாட்சமனைக் கூப்பிடு, போலிசுக்கு போன் செய் எடு சொல்லிக் கொண்டிருக்க … கண்ணம்மா தான் ஓடி வந்தா பாருங்க… அப்படி ஒரு ஓட்டம் …தான் பிள்ளையோட சத்தத்தைக் கேட்டு ஓடி வந்தவ … சாக்கடையில இறங்கிவிட்டா …பத்து ,பதினைந்து
நிமிசம் இருக்கும் , அதுக்கு பிறகுதான் வாட்சமனே ஓடி வந்தான் …
பிள்ளைய பிடிச்சுக் கொண்டு மேல வந்து பர பரவென்று துடைச்சு , மூச்சு குடுத்த பாருங்க , அவனும் அப்பத்தான் கண்ணைத் திறந்தான் … எல்லோருக்கும் மூச்சே வந்துசும்மா …
என்னதான் பதை பதைத்தாலும் யாரும் பக்கத்தில போக அருவருத்துக் கொண்டிருக்க ..அவளே தண்ணீர் மெண்டு வந்து குளிப்பபடி விட்டாள் பாருங்க …அதுக்கு

பிறகு தான் அவன் அம்மாகிட்டயே போனான் …எல்லோரும் கண்ணம்மாவை புகழ , அவள் தான் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு ஒண்ணுமே நடக்காது போல சிரிச்சுக் கொண்டு போய்விட்டாள்….
அந்தக் கருமாரி அம்மனே நேரில பார்த்த மாதிரி இருந்துச்சும்மா அவளைப் பார்க்க …
ம்ம் … கண்ணம்மா இஸ் ரியலி கிரேட் தான் …
என்ன அவளைப் பார்த்து முகச் சுழிப்பவர்கள் ,நாளையிலிருந்து புன்னகைக்க கூடும் … நாளை அந்தக் குழந்தைகளோடு கண்ணம்மாவின் குழந்தையும் விளையாடலாம் .நாம் தான் அடிக்கடி மாற்றுகிறோம் எம் குணத்தை , வசதிக்கு , புகழுக்கு , பெருமைக்கு என …
அவள் எப்பவுமே இப்படி தான் இருக்கக் கூடும் …
அதனால அவளுக்கு ஒண்டும் பெரிதாய் வித்தியாசம் இருக்காது …
என்று சொல்லிக் கொண்டு நான் அறைக்குள் நுழைந்தேன் .. கண்ணம்மா அதே வறுமையின் கோடுகளோடு இருந்தாலும் ,இன்று என் கண்ணுக்கு பேரழகியாய் தெரிந்தாள்..

---

# உழைக்கும் தாய்மாரின் உரிமைகளை பாதுகாத்து சோஷலிச கிழக்கு ஜெர்மனி




சோஷலிச நாடுகள் என்றால், "சர்வாதிகாரம், ஜனநாயக மறுப்பு, சுதந்திரமின்மை…" இப்படியான கருத்துக்கள் தான் பரப்பப் பட்டு வந்துள்ளன. தானும், தன் குடும்பமும் மட்டும் வாழ்க்கை
வசதிகளை அனுபவித்தால் போதும் என்ற சுயநலம் மிக்க தமிழ் மேட்டுக்குடியினரும் அப்படித் தான் பிரச்சாரம் செய்வார்கள். ஆனால், எதிர்மறையான பிரச்சாரங்களுக்கு அப்பால், சோஷலிச நாடுகளில் நிலைமை எப்படி இருந்தது என்று ஆராய விட மாட்டார்கள்.

பிரான்ஸ் நாட்டில் கற்றோரினால் மதிக்கப்படும் டுந ஆழனெந தினசரிப் பத்திரிகையின் மாத இதழான Le Monde diplomatique> முன்னாள் கிழக்கு ஜெர்மனியில் பெண்களின் நிலைமை பற்றி ஒரு கட்டுரை பிரசுரித்துள்ளது. அதில் வந்த தகவல்களை இங்கே தருகிறேன்:

பெர்லின் மதில் விழுந்த பின்னர், இரண்டு ஜெர்மனிகளிலும் வாழும் பெண்களின் வாழ்க்கைத்தரம் ஒரே மட்டத்திற்கு வரும் என்று சமூக விஞ்ஞானிகள் எதிர்பார்த்தார்கள். ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு என்று அழைக்கப் பட்ட முன்னாள் மேற்கு ஜெர்மனியில், ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளை வைத்திருந்த 16மூ தாய்மார் மட்டுமே முழுநேர ஊழியர்களாக இருந்தார்கள். ஆனால், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு என்று அழைக்கப்பட்ட முன்னாள் கிழக்கு ஜெர்மனியில், 52மூ தாய்மார்கள் முழுநேர வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஜெர்மன் ஒன்றிணைவின் பின்னர், முன்னாள் கிழக்கு ஜெர்மனியை சேர்ந்த தாய்மார் அதிகமாக பாதிக்கப் பட்டுள்ளனர். முன்பு சோஷலிச நாடாக இருந்த காலத்தில், பெண்கள் மிக இலகுவாக குடும்பத்தை பராமரித்துக் கொண்டே வேலைக்கும் சென்று வர முடிந்தது. அதே நேரம், முன்னாள் மேற்கு ஜெர்மனியில் வாழ்ந்த பெண்களுக்கு அது மிகவும் சிரமமான விடயமாக இருந்தது. தற்போது, வேலைவாய்ப்பு கிடைக்காத கிழக்கு ஜெர்மன் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அது அவர்களது வாழ்க்கை முறைகள், எதிர்காலத் திட்டங்களிலும் மாற்றங்களை உண்டாக்கி உள்ளது. அது மட்டுமல்லாது, அவர்களது தன்னம்பிக்கையும் குறைந்துள்ளது.

1950 ம் ஆண்டுக்குப் பிறகு, ஐரோப்பிய நாடுகள் எங்கிலும் வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இருப்பினும், முதலாளித்துவ மேற்கு ஜெர்மனியுடன் ஒப்பிடும் பொழுது, சோஷலிச கிழக்கு ஜெர்மனியில், உழைக்கும் பெண்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகமாக இருந்தது! பெர்லின் மதில் விழும் வரையில், 92% கிழக்கு ஜெர்மன் பெண்கள் நிரந்தரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். 60% பெண்கள் மாத்திரமே வேலைக்கு சென்று கொண்டிருந்த மேற்கு ஐரோப்பாவுடன் ஒப்பிடும் பொழுது, கிழக்கு ஜெர்மன் உழைக்கும் பெண்களின் விகிதாசாரம் உலகிலேயே மிக அதிகமானதும், தனித்துவமானதும் ஆகும்.

92% பெண்கள் வேலைக்கு சென்ற யதார்த்தத்தை கவனத்தில் எடுத்தால், கிழக்கு ஜெர்மன் பெண்கள், ஆண்களுக்கு நிகரான சம உரிமைகளை அனுபவித்தனர் என்பது தெளிவாகும். மேற்கு ஜெர்மன் பெண்கள், "குழந்தைகளை பராமரிப்பதற்காக வீட்டில் இருக்க வேண்டும்" என்ற நிலப்பிரபுத்துவ மரபில் இருந்து விடுபட முடியாமல் இருந்தனர். அதே நேரம், கிழக்கு ஜெர்மன் பெண்கள், கணவனின் சம்பாத்தியத்தை நம்பியிராமல் சுயமாக சம்பாதித்து சொந்தக் காலில் நின்றனர்.

எழுபதுகளில் கிழக்கு ஜெர்மனியில் குழந்தைகள் பிறக்கும் விகிதம் குறைந்தது. அதனால், திருமண-மாகாத யுவதிகளும், விவாகரத்து செய்த பெண்களும், குழந்தை பெற்றுக் கொள்வதை அரசு ஊக்குவித்தது. "சோஷலிச சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான மனித வலு" என்று சாமானிய மக்களால் நையாண்டி செய்யப்பட்டாலும், அரசு அவர்களுக்கு வேண்டிய விசேட சலுகைகளை செய்து கொடுத்ததன் மூலம், சமூக அந்தஸ்தை உயர்த்தியது. அதே நேரம், மேற்கு ஜெர்மனியில் வாழ்ந்த பெண்களில் பலர், விவாகரத்துக்குப் பின்னர் வறுமைக்குள் தள்ளப் பட்டனர். தாய்மை அடைவது, பெண்களின் பின்னடைவாக கருதப் பட்டது.

அதனால், ஜெர்மன் ஒன்றிணைவின் பின்னர், முன்னாள் கிழக்கு ஜெர்மன் பெண்கள் அதிகளவில் பாதிக்கப் பட்டதில் வியப்பில்லை. எந்தக் காலத்திலும் வேலையில்லாப் பிரச்சினையை அனுபவித்திராதவர்கள், தமக்கு பல சலுகைகளை வழங்கிய அரசமைப்பு நொறுங்கிப் போனதை உணர்ந்து கொண்டார்கள். தற்போது (ஒன்றிணைந்த ஜெர்மன்) அரசின் தொழில் முகவர் நிலையத்திற்கு செல்லும் ஓர் இளம் தாய், "எனக்கு ஒரு குழந்தை இருக்கிறது" என்று சொன்னால், அலுவலர்கள் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள். (ஏனென்றால் அவருக்கான வேலை வாய்ப்பு மிக மிகக் குறைவாகும்.)

முன்னாள் கிழக்கு ஜெர்மனியில், அரசு எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தது. ஒரு வேலைக்குப் போகும் தாய், தனது குழந்தைகளை பராமரிப்பதற்கு குடும்ப உறுப்பினர்களை பிடித்து விடத் தேவையில்லை. வேலைக்கு செல்லும் கணவனும் நேரத்தை ஒதுக்கத் தேவையில்லை. அரசே குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களை ஒழுங்கு படுத்திக் கொடுத்தது. இதனால், தாய்மார்கள் மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டி இருக்கவில்லை. ஜெர்மன் ஒன்றிணைவு, முன்னாள் கிழக்கு ஜெர்மன் பெண்களின் சுதந்திரத்தை பறித்தெடுத்து விட்டது.

2000 ம் ஆண்டு எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின் படி, முன்னாள் கிழக்கு - மேற்கு ஜெர்மனிகளை சேர்ந்த பெண்கள், வேலை, குழந்தைகள் பற்றி, இரண்டு மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. பொதுவாக எல்லாப் பெண்களும் பிள்ளைகள் தமக்கு முக்கியம் என்று சொன்னார்கள். இருப்பினும், மேற்கு ஜெர்மன் பெண்கள், தொழிலை விட, பிள்ளை வளர்ப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். தம் முன்னால் இருந்த அனைத்து வகையான கஷ்டங்களையும் பார்த்த பின்னரும், வேலையில்லாத காலத்தை, குழந்தை பராமரிப்பில் செலவிடுவது சிறந்தது என்று நம்பினார்கள்.

அதற்கு மாறாக, கிழக்கு ஜெர்மன் பெண்கள், தொழிலையும், குழந்தை வளர்ப்பையும் சமமான கடமைகளாக கருதினார்கள். தங்கள் பிள்ளைகளின் படிப்புக்கும், எதிர்காலத்திற்கும் வேலை செய்யும் தாய் முன்னுதாரணமாக இருப்பார் என்று நம்புகிறார்கள். வேலைக்கு செல்வதால் தாம் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், அதனால் தாயின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எந்த இடையூறும் வராது என்றும் சொல்கின்றனர். தங்களது பொருளாதார சுதந்திரம், முழுக் குடும்பத்திற்கும் நன்மை பயக்கும் என்று வாதிடுகின்றனர்.

மேற்கு ஜெர்மன் பெண்கள், (வேலைக்கு போகாமல்)

வீட்டில் இருந்து குழந்தைகளை பராமரிப்பது, தாயின் கடமை என்று கூறுகின்றனர். குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களின் பயன்பாட்டை அங்கீகரித்தாலும், அதன் திறக்கும் நேரங்களுடன் ஒத்துப் போகின்றனர். (குழந்தை பராமரிப்பு நிலையங்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் மட்டுமே திறந்திருக்கும்.) கிழக்கு ஜெர்மன் பெண்கள், முன்பு இது போன்ற பிரச்சனைகளை சந்தித்து இருக்கவில்லை. (அதாவது, அதிகாலையோ, இரவோ, வேலைக்கு செல்லும் நேரம் எதுவாக இருந்தாலும், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் எந்த நேரமும் திறந்திருக்கும்.) அதனால், குழந்தை பராமரிப்பு நிலையங்களின் சேவை, எல்லா நேரத்திலும் இலகுவில் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று, கிழக்கு ஜெர்மன் பெண்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்போது தான், வேலை வாய்ப்பும் இலகுவாக கிடைக்கும்.

ஒரு வேலையற்ற இளம் தாய், தனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கும் காரணத்தை காட்டி, பல இடங்களில் வேலை மறுக்கப் பட்டதாகக் கூறுகின்றார். தன்னால் குழந்தையை பராமரிப்பதற்கு ஒழுங்கு படுத்த முடியும் என்று சொன்ன போதிலும் யாரும் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இருக்கவில்லை. அடுத்த குழந்தைக்கு எதிர்பார்ப்பதாக எந்த இடத்திலும் உண்மையை கூற முடியாது. இதனால், வேலைக்கான நேர்முகத் தேர்வில், இன்னொரு குழந்தைக்கு ஆசையில்லை என்று கூற வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகின்றது. கம்யூனிச ஆட்சிக் காலத்தில் நடக்கும் நேர்முகத் தேர்வுகளில், அப்படி ஒன்றை கூறும் நிலைமையை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது.

முன்னாள் கிழக்கு ஜெர்மனியை சேர்ந்த தாய்மார் எல்லோரும், தமது அவமானத்தை பொறுத்துக் கொண்டு, புதுமையான விதிகளுடன் கூடிய விளையாட்டுக்களை விளையாட வேண்டியுள்ளது. அதே நேரம், முன்னாள் மேற்கு ஜெர்மன் தாய்மாரைப் பொறுத்தவரையில் இது வாழ்க்கையின் யதார்த்தம்.

(விவாகரத்து பெற்று தனியாக வாழும்) இளம் தாய் ஒருவர் தனது அனுபவத்தைக் கூறினார்:
"ஒரு தடவை எனது வீட்டுக்கு அருகாமையில் இருந்த நிறுவனம் ஒன்றில் அலுவலகப் பணியாளர் வேலை கிடைத்தது. எனது நிர்வாகி, அவரும் ஒரு பெண், ஒரு நாள் என்னைக் கூப்பிட்டு பேசினார். வாரத்திற்கு நாற்பது மணித்தியாலத்திற்கும் அதிகமாக, அல்லது வார இறுதி நாட்களில் வேலை செய்ய வேண்டும் என்றும் நாங்கள் உன்னைக் கேட்போம் என்றார். அதற்கு நான் முடியாதென்று மறுத்து விட்டேன். அது எனது தவறு. அவருக்கு என் மேல் கோபம் வந்து விட்டது. ஊரில் எத்தனை ஆயிரம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் தெரியுமா? இந்த வேலை கிடைத்ததற்காக சந்தோஷப் பட வேண்டும் என்று சத்தம் போட்டார்."


தனது அனுபவக் கதையை கூறி விட்டு அந்தத் தாய் கேட்டார்:"எனக்கு வேலை முக்கியம் தான். ஆனால், வேலை காரணமாக காலை முதல் இரவு வரையில் எனது குழந்தையை பார்க்க முடியாதென்றால் அது என்ன வாழ்க்கை? என்ன மாதிரியான சமுதாயத்தில் வாழ்கிறோம்?"

சமூக விஞ்ஞானிகளான துரவவய புளளை, னுயபஅயச ஆநலநச ஆகியோரின் கூற்றின் படி: "முன்னாள் கிழக்கு ஜெர்மனியின் குடும்பக் கொள்கையானது பெண் விடுதலையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அது இன்றைக்கு நடக்க முடியாத ஒன்று. பெரும்பாலான பெண்கள் செய்து வந்த தொழில்கள், ஆண்களுடையதை விட தரம் குறைந்ததாக இருந்தது உண்மை. அதனால் 30சூ குறைந்த சம்பளம் கிடைத்தது. இருப்பினும், (வாடகை கட்ட முடியாமல்) வீட்டை இழக்க வேண்டுமென்ற பயம் இருக்கவில்லை. குழந்தை பரமாரிப்பு நிலையத்தில் இடம் கிடைக்குமா என்ற கவலை இருக்கவில்லை. ஏனென்றால், அவர்கள் அரசின் நம்பகமான சமூகநலத் திட்டங்களில் தங்கி இருந்தார்கள். பெண்களுக்கு சம உரிமை வழங்க வேண்டுமென்றால், அது கவனத்தில் எடுக்கப் பட வேண்டிய, மிக முக்கியமான விடயம்."

பெர்லின் மதில் விழுந்தவுடன், கிழக்கு ஜெர்மனியின் பாலின சமத்துவமும் விழுந்து விட்டது. ஆயினும், கால் நூற்றாண்டுக்குப் பின்னரும், அது சமூகத்தில் தாய்மாரின் சிந்தனைப் போக்கை தீர்மானிக்கிறது.

(நன்றி: Le Monde diplomatique> June 2015)

(பிற்குறிப்பு: ஐரோப்பாவில் வசிக்காத தமிழ் வாசகர்கள் புரிந்து கொள்வதற்காக, நான் கட்டுரையில் சில இடங்களில் மேலதிக விளக்கம் கொடுத்துள்ளேன்.)
(நன்றி: கலையகம்)




தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை